ലോകമിത്രം

V2. No.4. 24 Jan 1929

൨

3L
R0211, N28K4
1929.2.4
189039

NILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஞு ஜனவரிமீ 24உ [No. 4.

OFFICE OF THE REGISTRAR MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	61	5.	வில்லிபாரத விளக்கம். T. S. நடராஜ பிள்ளை B. A., B. L.	72
2.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	63	6.	இராமனுக்கிளையோர் இருமூவராவர் K. இராமரத்நம் ஐயர் B. A.	74
3.	தமிழ்ப் பாடம்	66	7.	வர்த்தமானம்	79
4.	அப்பர் E.N. தணிகாசல முதலியார் B. A., B. L.	68			

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானுலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி. இல் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங் தென்னுப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.

மானேஜர்.

கலா நிலயம்.

கட்டளைக்கல்.

ஒருவருக்கும் ஒன்றிற்கும் உரிமையென்பது ஒன்றுமில்லை என்ற உண்மையைச் சென்றவாரத்துத் தலையங்கத்தில் உரைத்தோம். அங்கு நாம் குறித்த விஷயங்கள், சாதாரணமாக ஜனங்கள் கருதும்படி கற்பிக்கப் பெற்றிருக்கின்ற எண்ணங்களுக்கு நேர் எதிராக விருப்பதாகத் தோன்றலாம். ஆயினும்,அக்காரணம்பற்றியே அவை உலகத்திற்கு ஒவ்வாப் புதுமையால் பயனற்றன வென்று விரைந்து மதித்துவிடுதல் நேரிதன்று. பெரும்பான்மை உலகத்திலெங்கும் ஒக்க நிகழ்வன உண்மையாயிருக்க நேர்கின்றதாலும் பொதுஜனக் கொள்கைகள் சிற்சில பொய்மைபற்றித் தொடர்கின்றனவென்பதையும் மறக்கவேனும் மறுக்கவேனும் இயலாது. உரிமை என்று உரைப்பதற்கொத்த ஒருதன்மை மனிதருக்கு இருக்கின்றது என்று எல்லாரும் எங்கும் இடைவிடாமல் விளம்பரஞ் செய்துகொண்டு வருகின்ற காரணத்தாலேயே அவ்வுரிமை என்பது இருந்துதான் தீரவேண்டும் என்னும் நியதியில்லை, என்ற வாய்மையை ஏற்றுக்கொண்டு ஆராயப்புகுவோர்க்குக் கட்டளைக் கல்லாய் உதவக்கூடியன இரண்டுள. ஒன்று உலக அநுபவம்; மற்றது, ஆன்ம உணர்ச்சி.

உலக அநுபவம், ஆன்மவுணர்ச்சி என்று இருவகைகளாகப் பிரித்துக் கூறினோமாயினும் ஆழ்ந்து நோக்கினல் அவை இரண்டும் ஒன்றேயாதல் புலப்படும். அவ்வாறு, ஒன்றேயாவது புலப்படாத காலத்தும் அவ்விரண்டும் ஒன்றிற்கொன்று மிகநெருங்கிய தொடர்புடையவைகளா யிருப்பதேனும் ஐயமின்றித் தெரியவரும். நமது வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் நம்முடன் நேரே சம்பந்தப்பட்டதும் படாததுமான பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம். அவைகள் ஒவ்வொன்றிற்கும் காரணமும் நிகழ்வும் முடிவும் உள. ஆயினும், இம்மூன்றையும் தனித்தனியாகப் பிரித்து வேறு வேறாகப் பேசுதற்கு இயலுமேயொழியத் தினசரிவிவகாரங்களில் அவை ஒன்றோடொன்று கலந்தும் உறழ்ந்தும் நடக்கும். ஏனெனில் ஒரு காரணத்தால் உண்டாய நிகழ்ச்சியொன்று முடிவது போல் தோன்றினும் அம்முடிவினல் யாதும் பயன் பிறவாமல், அம்முடிவே வேறொரு நிகழ்ச்சிக்குக் காரணமாயமைதலும் இயலும். ஆதலின் இவை, இருகோடியும் பிணித்துளவொரு சங்கிலித் தொடர் போலாம். இத்தொடரினில் இன்பமாய் நிகழ்ந்து நன்மையாய் முடிகின்ற ஒவ்வொரு வளையமும் உண்மையானவொரு காரணத்தைப்பற்றித் தொங்குகின்றது.

புரைதீர்ந்த இன்பம் தருவனவெல்லாம் நன்மையாய் முடிவதும், முடிந்த அந்நன்மை மீண்டுமோர் இன்பத்திற்குக் காரணமாய் நிற்கலாவதும் நம்மிடையே நிகழ்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகளால்

எய்துகின்ற ஓர் அறிவு. முதலில், இன்னகாரியம் இன்னகாரணத்தால் நடைபெற்று இன்ன இன்பம் விளைத்து இன்ன நன்மையாய் முடிகின்றது; அந்நன்மையும் பின்னுமொரு இன்பத்திற்கு ஆதாரமாகி மேலும் இன்னவொரு நன்மையாய் முடிகின்றது, என்று சங்கிலியில் பின்வளையம் ஒன்றைவிட்டு முன்வளையம் ஒன்றைப்பற்றிக் கருதிக்கொண்டே போவதற்கு ஆதாரமாயிருப்பது நமது தினசரி வாழ்க்கையில் நிகழ்கின்ற பற்பல காரியங்களின் அனுபவங்களாம். அவ்வாறே, இன்னகாரியம் இன்ன காரணத்தால் நடைபெற்று இன்னதுன்பம் விளைத்து, இன்ன தீமையாய் முடிகின்றது; அத்தீமை மீண்டும் இன்னதுன்பத்தை உண்டாக்கி மேலும் இன்னவொரு தீமையாய் முடிகின்றது, என்று எதிர்வகையில் கருதுவதற்கும் ஆதாரமாயிருக்கும் அனுபவங்களும் உள. புலன்களுக்கு எட்டக்கூடிய காரணத்தால் அவயவங்களைக்கொண்டு செய்யலாகின்ற காரியங்களோடு சேர்த்து முன்சொன்னபடி இன்பமும் துன்பமும் நன்மையும்தீமையும் இவைஇவையென்று தனித்தனி விஷயங்களுக்குத் தேர்ந்து அதற்கிணங்க நாம் சிலவற்றை விரும்புவதும் சிலவற்றை வெறுப்பதும் ஆகிய இக்குணத்தைத்தான் முன் உலகஅனுபவம் என்னும் கட்டளைக்கல் என்றேம். ஒவ்வொருதரம் இந்த விருப்பேனும் வெறுப்பேனும் நம்மனதில் உண்டாகி அவ்விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றவாறு நமது காரியங்களைச்செய்து நம்முடைய இன்பத்தை எய்தியும் துன்பத்தை விலக்கியும் விட்டபின் அவ்வனுபவம் அதனோடு முடிந்து விடுவதுபோல் தோன்றின போதிலும் நம்மனதிலே சிறிது சிறிதாக ஓர் உணர்வு தங்கித் திரண்டுகொண்டு வரலாகின்றது. இவ்வுணர்வு நம்முடைய*சுகத்தைச் சாராததாய், நம்முடைய நன்மை தீமைகளோடு தொடர்பற்றுப் பொதுவாக எக்காலத்திலும் எவ்விடத்திலும் யாவருக்கும் நன்மை இது, தீமை இது, இன்பம் இது, துன்பம் இது,என்ற வொருஎண்ணத்தைத் தாண்டிக்கொண்டிருக்கும் வன்மையை உடையது. அத்தகைய வன்மையும் தன்மையும் உடைய உணர்வின் தொகுதியைத்தான் ஆன்ம உணர்வென்னும் கட்டளைக்கல் என்று அழைத்தோம்.

மேற்சொன்ன விஷயங்கள் சிறிது மறை பொருளாக இருப்பது இயற்கையே. அவைகளை உதாரணங்களால்விளக்குவதெனில் விரியுமென்றஞ்சிஉதாரணங்கள் காட்டாமல்விட நேர்கின்றது. ஆயினும், இவைகளைக் கருத்திலுள் ஊன்றவைத்துச் சிந்திப்போர்க்கு அனுபவம் ஆன்ம உணர்வு என்பவைகளின் தன்மை எளிதில் தெளிவுறும் என்பதற்கையமில்லை. அப்படித்தெளிந்த சிந்தையராய் ஆர அமர்ந்த வோர் மனநிலையில் நின்றுகொண்டு 'உரிமை' என்ற அச்செய்தியின் தன்மையை அனுபவத்தைக்கொண்டும் ஆன்ம உணர்வைக் கொண்டும் சோதிக்குங்காலையில் அது உண்மையன்றென்பது வெட்ட வெளியாகும். மெய்ம்மையே நன்மை பயக்கும். அது நன்மை பயக்குகின்றதென்பதற்கு அடையாளம் இடையே நிகழ்கின்ற இன்பம். ஆதலின் இன்பமாய் நிகழ்ந்து நன்மையாய் முடிவதற்கு எது ஆதாரமாயிருக்கின்றதோ அது வொன்றே உண்மையென உரைக்கத்தக்கது. "மெய்ந்நெறி நன்மையன்" என்று எடுப்பும் இணையும் அற்ற நம்பநாட்டாழ்வார் பரம்பொருளைக் குறிக்கின்றபோது இந்த மெய்ம்மைக்கும் நன்மைக்கும் இருக்கின்ற தொடர்பையே மனதில் வைத்துக் குறித்திருக்கின்றார். "இது எனது உரிமை, ஆதலால் இதனை யான் பெறுதல்வேண்டும்" என்ற ஊக்கத்தோடு ஒரு கருமத்தைச்செய்யப் புகுகின்ற காலையில் அதனால் எவருக்கேனும் இன்பமேனும் நன்மையேனும் நேர்ந்திருக்கின்றதோ! இன்பம்வேறு, இன்பம்வரும் என்ற நம்பிக்கை வேறு; அவ்வாறே, நன்மை வேறு, நன்மையாகும் என்றநம்பிக்கை வேறு. சாதாரணமாகச் சனங்கள் இந்த நம்பிக்கையையே இன்பம் என்றும் நன்மையென்றும் மயங்கிவிவகரிப்பதால், உரிமையைக் கையாள்வதால் இன்பமும் நன்மையும் இல்லையெனச் செப்புவது ஆச்சரியமாக இருக்கலாம். இந்த வுரிமையைப்பெற்றால் நமக்கு இன்பமுண்டு நன்மையுண்டு என்று மனம் நாடுவது வாஸ்தவம். ஆனால்,நாடிய அவ்வின்பமும் நலமும்வாய்த்ததென்பது எத்திறத்தோர் அனுபவத்திலும் இல்லையே. ஆதலாற்றான், அனுபவத்தின் கட்டளைக் கல்லில் அதனைச் சோதிக்கவேண்டுமென்று முன்னர்க்கூறினோம். இதற்கு மாறாகக் கடமையைக் கருத்திற்கொண்டு வினைகளைப்புரியப்புகுகின்ற காலத்தில் யாவருக்கும் அது இன்பமென்ற நம்பிக்கையைத்தூண்டாவிட்டாலும், இன்பமாய் நன்மையாய் முடிகின்றது முதியதோர் உண்மையாம். கடமையை ஆற்றி ஆற்றிப் பயின்றிருப்போர்க்கு இந்த ஆன்ம உணர்வும் திரண்டிருக்கும். அவ்வவர் தம்முதிர்ச்சிக்கு ஏற்றவாறு அனுபவத்தையேனும், ஆன்ம உணர்வையேனும் வினவிக்கொள்ளட்டும். பிறகு உரிமை என்ற எண்ணம் முற்றிலும் கடமைக்கே இடந்தந்து பறந்து போம்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

பாவை யிடையும் பரம்பொருள் நிலையும்

52 பக்கத் தொடர்ச்சி.

கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப் பிரிந்தவர் உணர்வும் உடலும் உயிரும் ஒன்றாக மீண்டும் முன்னாள் கூடினர். கூடிய இவர் தம்மில் அண்ணலுக்கு வரிசிலை இருந்ததென்றால், அதற்கீடாக நங்கைக்கும் ஓர்படை இருந்ததென மறவாத கம்பரவளை 'வாட்கண்ணங்கை' யென்றழைப்பர். படைக்கலங்களுடைமையில் அவ்விருவரும் சிறிதுங் குறையாமல் ஒத்தமைபோன்றே, வேறுசில இன்மையிலும் இணையாயிருக்குமாறு, மருங்கிலா நங்கையவட்கு வகையில் ஐயன் இவன் ஆயினன். எல்லா நலங்களும் எய்தியுள இவ்விருகாதலார் இருக்கத்தகாதனவே இல்லாதிருந்தனர் என்று ஒழித்துக்காட்டும் நயமொன்றும் இவ்வாசகத்திற் சிறக்கின்றது. அதுவுமன்றித் தயரதன் பெருமகனையும் ஜனகன் திருமகளையும், "என்னே இவர் எழில்! என்னே இவர் வைபவம்!" என்றென்று நம்மனோர் இமையாமல் நோக்குகின்ற நேரமிதுவாதலால், இவர்களுக்கு மொவ்வொன்று இல்லையென்று சொல்லளவிலேனுங் காட்டிக் கண்ணெச்சில் கழிக்கவும் கம்பர் கருதி யிருக்கலாம்.

இடை சிறிது சிறுத்திருப்பது மாதர்களுக் கழகு. இதனைக் கருத்துட்கொண்ட கவிகள், சிற்றிடை என்றும் மெல்லிடையென்றும் நுண்ணிடையென்றும் பிடியிடையென்றும்துடியிடையென்றும்கொடியிடையென்றும்நூலென்னத்தோன்றுத நுண்மருங்குலென்றும், மின்னலிடையென்றும், மெல்லமெல்லத் தேய்த்துத்தேய்த்துக் கடைசியில் இடை உண்டோ இல்லையோவெனவினவிப் பின்பொய்யோஎன அயிர்த்து இல்லையே நுசுப்பு என முடித்துவிட்டனர். மாதர்க்குப் புலவரால் மருங்குல் போனவாறு இது. வருணனை வகைகளில் முன்னொரு புலவர் கூறியதையே பின்வந்தவர் வழிவழியாகக் கூறிக்கொண்டு வருகின்றனர் என்பது உண்மையேயாயினும், பிற அவயவங்கள் செய்தி எவ்வாறானபோதிலும். இவ்விடுப்புவரையிலாதல் தற்குறிப் பேற்றத்தினாலும் உயர்வுநவிற்சியினாலும் புதுமைசில புலவர்வாயில் பிறந்துளதெனத் துணிதல் அருமையன்று.

மாதர்க்கு மருங்குல் இல்லை யென்றமரபிற்கொக்கக் கம்பர் இங்குச் சீதையை 'மருங்கிலா நங்கை' என்றழைத்தனர். இல்லை என்பது ஈண்டுச் சிறுமையின் பாலதாய சொல்லேயாயினும், உண்மையிலேயே அவளுக்கு இடையில்லையோ என்று பாராட்டுவதால் புனையப்பெறும் சில செய்திகள் புதுமையேயாய் இந்நூலில் திகழ்கின்றன. இந்த நங்கைக்கு மணக்கோலமணிந்த தாதிமார், அவள் திருமார்பில் தொய்யில் வரைந்து அலங்கரித்ததை நம் கவி,

சில்லிய லோதி கொங்கைத்
திரண்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லு
மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும்
பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற
இடையினுக் கிடுக்கண் செய்தார்.

[மெல்லிய தன்மைவாய்ந்த கூந்தலையுடைய சீதையின் திரண்ட இரத்தினங்களிழைத்த தங்கச் செப்பைப்போன்ற கொங்கைகளின்மீது, காமவல்லி கரும்புவில் முதலிய உருவங்களைக் கஸ்தூரிச் சாந்தினால் தொய்யிலாகத்தீட்டி, பல்வேறு வழிகளால் தேடிப்பார்க்கும் பரம்பொருளைப்போல் யாவருக்கும் இல்லையென்றும் உண்டுஎன்றும் நின்ற இடை இந்தத் தொய்யிலின் பாரத்தினால் மேன்மேல் வருந்தும்படி செய்தார்]

என்று பரிவுகூர்கின்ற இடத்தில் பிராட்டியினிடையும் பரம்பொருளின்நிலையும் ஒன்றாயகேண்மை விருந்தேயாம். இருக்கின்றதென்பது நிச்சயம். காட்சிப் பிரமாணமே கதியென்றிருப்போர் இல்லை என்பார். மற்று அநுமானப் பிரமாணங்களை நம்புவோர் உண்டென்பர். இது பாவை யிடைக்கும் பரம்பொருளிற்கும் ஓரே பெற்றியாய்ப் பொருந்தியமையும். ஆன்மானுபவமாய்க் கடவுளினுணர்வை எய்தியவர் தவிர மற்றையோர் நாஸ்திகரேனும் ஆஸ்திகரேனும் அவர்கள் உண்டு இல்லை என்று உரைக்குங்காலையும், உண்டு என்பவர்க்கு இல்லையோ என்னும் ஐயமும், இல்லை என்பவர்க்கு உண்டோ என்னும் ஐயமும் உடனுக்குடனே தோன்றிக்கொள்வது இயற்கை. உண்டு என்னும் ஐயத்தைக்காட்டிலும் இல்லையெனும் எண்ணம் அதிகமாயின் அவனை நாஸ்திகனென்றும், இல்லை என்னும் ஐயத்தைக்காட்டிலும் உண்டு என்னும் நினைவு அதிகமாயின் அவனை ஆஸ்திகன் என்றும், ஐயத்தின் அளவைக்கொண்டு வழங்குதலாகுமேயல்லாது எள்ளளவும் ஐயமின்றி ஏற்பாரும் மறுப்பாரும் எங்கும் இலர். இன்னபடி பல்லியல் நெறியிற் பார்ப்போர்தம் ஐயமும் துணிவும் எதுவாயினும் சீதையின் இடையைப்போல் பரம்பொருளும் இருப்பது உறுதியே. இத்தகை ஆஸ்திகன் ஒருவன் கடவுளைப் பற்றித் தனக்குள்ளே வினவிக்கொள்ளுங் குரலைப் பின் அயோத்தியா காண்டத்தில், கங்கைப் படல முதற் செய்யுளில் சீதையைப் 'பொய்யோ எனும் இடையாள்' என்றுவருணிப்பதில் மீண்டும் கேட்கின்றோம். ஆனால் சீதைக்கு இடுப்பு இல்லை என்பது சூர்ப்பனகைக்கு மாத்திரம் நிச்சயம். மூக்கற்றதேனும் அறாது பெருகும் மோகமுடையளாய் அவ்வரக்கி, "உனக்குத்தான் சீதை யயல்இருக்கின்றாள் என்னுங் காரணத்தாலென்னை யேற்காயாயின் நின்னிளையோன் இவ்விலக்குமணனோடேனும் என்னை வாழவைத்திடு" என்று இராமனை வேண்டி, மற்று

இளையவன் றா னரிந்த நாசி
ஒருங்கிலா விவனோடு முறைவேனோ வென்பானேல்
இறைவ வொன்றும்
மருங்கிலா தவனோடு மன்றோநீ நெடுங்காலம்
வாழ்ந்த தென்பாய்

["உன் தம்பியோ, துணித்த மூக்குச் சிறிதும் இல்லாத என்னோடு சேர்ந்துவாழ எவ்வாறு சம்மதிப்பேன் என்று பிணங்குவானாயின், தலைவ, இடையென்பதே, இல்லாதவளோடு நீ நெடுங்காலம் கூடிவாழ்வதை அவனுக்கு எடுத்துச்சொல்லிச் சமாதானஞ் செய்வாய்]

என்று,இதற்கு எதிருரை யரிதெனும்படி இயம்பிவிட்டாள். இவ்வகைச் சீதையின் இடுப்பை ஒட்டிய சிலவிடங்கள் நம்நினைவிற்கு இதுபோது வந்தனவற்றைக் கவிமரபின் உதவிகொண்டே புதியன புனைதற்கியலுமென்பதற்கு உதாரணமாய்க் காட்டினோம். இனி, இராமன் திருமணத்திற் கெழுந்த தசரதன்பரிவாரங்களுள் காளை அன்னான் ஒருவன், அலையின் கருளொத்து நீண்டகூந்தலையும் தாமரையன்ன சிறியபாதங்களையும் கருங்கண்களாகிய வாள்களையும் உடைய ஒருத்தியைவம்பிற்கிழுத்து அசதியாடநினைத்தவனாகி,

நெருங்கு பூண்முலை நீள்வளைத் தோளினிர்
மருங்கு லெங்கு மறந்தது நீரென்றான்.

['ஆபரணங்களணிந்த நெருங்கிய முலைகளையும், நீண்ட வளையல்களை யணிந்த தோள்களையுமுடைய மாதே, உன் இடுப்பை எங்கேவைத்து மறந்துவிட்டாய்', என்று வினவினான்]

என்பதுபோன்ற பல்வகைச் சுவைகளுடன் விளங்கும் இடங்கள் இவ்விராமாயணத்திலும் பிறநூல்களிலும்பல பரக்கக் காணலாம்.

இல்லை, என்ற சொல்லைச் சீதையுடன் சேர்க்க வேண்டுமாயின் அன்னாள் இடையன்றி பொன்னாம் இலக்காவதற்குமில்லை. இவ்வின்மையோடிணங்க இராமனை "வசையில் ஐயன்" என்று கம்பர் உரைக்க நேர்ந்தது. ஒருவனைக் 'குற்றமொன்றும் இல்லாதவன்' என்று எதிர்மறையாகக் குறிப்பது சாதாரண மாந்தர்திறத்திற் பெருமையாய்த் தோன்றலாமாயினும் உயர்குணங்களெல்லாம் உடைய அவ்விராமனுக் கிவ்வடைமொழி பெருமையாமோ என்றயிர்க்கத்தகும். எனினும் திருக்குறள் தருகின்ற கட்டளைக்கல்லில் 'இவ்வசையில் ஐயன்' எனும் பொன்னுரையைச் சோதிக்குங்காலையில், அதினுஞ் சிறந்த அடைமொழி இராமனுக்குப் பொருந்தவைத்தல் அரிதென்பது புலப்படும். எவ்வாறெனில், இவ்வுலக மாந்தரையும் அன்னார் செயல்களையும் ஆராய்ந்து தெளியும்வகை அறிவுறுத்துகின்ற திருவள்ளுவர்,

அரியகற் றாசற்றார் கண்ணுந் தெளியுங்கால்
இன்மை யரிதே வெளிறு

[கற்பதற்கரிய நூல்களைக்கற்றுக் குற்றமற்றார் மாட்டும், ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை]

என்று செப்புவதினின்று எத்துணைதான் உயரியராயிருந்தாலும் குற்றமென்பது முற்றிலும் அற்றவர் இம்மையி லிருப்பவராகார் என்றகொள்கை நாட்டப்பெறுகின்றது. ஆதலாற்றான் மிஞ்சியதைக்கொண்டு மதித்தலொன்றே மானிடர்க்கமையும் என்பது விளங்கப் பின்,

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

[ஒருவனுக்குள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை யறிந்து, அவற்றுள்ளும் சிறப்பினாலேனும் எண்ணிக்கையினாலேனும் அதிகமாயிருப்பதனைக் கொள்க]

என்றும் எடுத்துக்காட்டுவார். எத்துணை உயர்ந்தோர் மாட்டும் எள்ளளவேனும் குற்றமென்பது இல்லாதிருத்தல் மானுடத்தன்மைக்கு இயற்கையன்று. அத்தனையும் சுத்தமாய் அமைவது தெய்விகம். இந்த உண்மையின்படி இராமனது தெய்விகத்தன்மையைக் காட்டும்பொருட்டே, மானுடத்திற்கு இன்றியமையாத அச்சிறுகுற்றமும் இல்லையென்று அறவே விலக்கி அவனை 'வசையில் ஐயன்' என்று நுண்ணியதோர் குறிப்பால் கம்பர் அழைக்கின்றனர்போலும். மற்றுப் பிரிந்திருந்ததிருமகளை மீண்டுங்கூடி இருவரும் மாறிப்புக் கிதயமெய்தி ஒருங்கியஇரண்டுடற்கு உயிரொன்றாகுமிச் செவ்வியில் இராமனை அன்னவாறு 'வசையில் ஐயன்' என்ன விளம்புவது பின்னும் பெரியதோர் பொருளுடையதாய் நிற்கின்றது. சத்தியாய இந்தச் சீதையைச்சேர்கின்ற சமயத்தில்தான் மானுடத்தன்மை முற்றிலும் நீங்கித் தயரதஇராமன் சுத்தத் தூய்மையாகிய பரத்வத்தை ஈண்டு எய்தினவனாயினான் என்னுமோ ருட்கருத்துக் கம்பநாடனுணர்வில் கலந்திருந்ததோ, யாதோ! பின்னாள், தன்னை வீரமும் விதியுமின்றி வீழ்த்திய இராமனை ஏசலுற்ற வாலி அவன் செய்கைக்குக் காரணம் எத்திறத்திலும் அறிதலாற்றானாய்,

ஆவியைச் சனகன்பெற்ற வன்னத்தை யமிழ்தின்வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனை போலுஞ் [செய்கை

என்று முடிவுகட்டி வினவியது கம்பருடைய கருத்திற்கு ஒக்க நிற்கின்றது.

முதனூலினின்று சிறிதுமாறி இராமனுஞ் சீதையு மின்னவாறு முன்னமே காட்சிகொள்ள நேர்ந்திராராயின், இந்நூலின்கண் இனி இக்காட்சியைச் சார்ந்து நிகழ்கின்ற அழகிய பாசுரங்கள்பல இடம்பெறுது போயிருக்கும். காதல்நோய்க் காற்றாது சீதை இப்படலத்திலும் கார்முகப்படலத்திலும் கடிமணப்படலத்திலும் இரங்குகின்றதைச் சாற்றுகின்ற செய்யுள்கள் இலக்கிய உலகத்தில் அழகாலும் நயங்களாலும் இணையேது மிலாது நிற்கின்ற நீர்மையன. அவைகளை ஆங்காங்கு இயம்புதல் முறையாகுமெனினும் நேரே இக்காட்சியை ஆதாரமாகப்பெற்றுத் திகழ்கின்றவோர் செவ்வியின் நுணுக்கத்தை ஈண்டு நினைத்தலும் பொருந்தும்.

கன்னிமாடத்தினின்று தான் கண்ணுற்றவளவில் காதலுள் ஆழ்ந்துபோன சீதை, அதற்கு இலக்காகிய இவ்விளவல் யாவன், எங்கிருந்து வந்தனன், தன் சிந்தையும் நிறையும் மெய்ந்நலனும் பின்செல அவன் முனியோடு போவது எவண், என்பனயாதும் அறிந்திலள். மீண்டும் அவனை யோர்முறை காணலாகும் என்னும் நம்பிக்கையும் அவட்கில்லை. மறுநாள் இராமன் மன்னவைசென்று அங்கு வில்லிறுக்கப்புக்க செய்தியொன்றுந் தெரிந்திலளாகி அவள் தன் மாளிகையின்கண் அமர்ந்து தளர்ந்தஉணர்வோடும், "சஞ்சலங் கலந்தபோது தையலாரை உய்யவந்து அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையோ" என்று அவனியற் பழித்தும், அவனது, "வாள் நிலாவின் நூல் உலாவும் மாலைமார்பு மீளவும்காணலாகும் ஆகின் என் ஆவியும் காணல் ஆகுமே" என ஏங்கியும் "மொய்கிடக்கும் அண்ணல்தோள் முயங்கிடாது முன்னமே கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்பது என்கொலோ" என்று தற்பழித்தும் நைந்துநைந்து இரங்கி விம்மிவிம்மியே இடருள்மூழ்குவாளாயினள். அதே சமயத்தில் மன்னன்முன் மண்டபத்தில் அப்புண்ணியன் பொருப்புவில்லைப் பொடி செய்துகொண்டிருந்தான். அதனைக் கண்ணுற்ற நீலமாலை என்பாள் ஒருத்தி சீதையின் உயிர்த்தோழி, சீதைக்கும் இராமனுக்கும் இடையே காதல்உதித்திருந்ததை அறிந்திலளாயினும் தன்தலைவிக்கு இச்செம்மலே தக்கநாயகன்

MADRAS

என்னும் எக்களிப்போடு அம்மங்களச் செய்தியைச் சீதைக்குத் தெரிவிப்பான் விரைந்தோடி வந்தனள்.

வந்தடி வணங்கிலள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனத் தொழுது சொல்லுவாள்

கயரத துரகமாக் கடலன் கல்வியன்
தயரத னெனும்பெயர்த் தனிச்செ னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவின் மேன்மையான்.

மராமர மிவையென வளர்ந்த தோளினான்
அராவணை யமலனென் றயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினான்.

[வந்த அந்த நீலமாலை, சீதையை வணங்கவும் வணங்காமல் எல்லையில்லாக் களிப்பினால் ஆடிப் பாடி ஆரவாரஞ் செய்துகொண்டிருந்தனள். அவளைச் சீதை நோக்கிச் "சுந்தரி, உன் மனதில் இப்பொழுது நிகழ்கின்ற மகிழ்ச்சியும், அதற்குக் காரணமாய் அமைந்த செய்கையும் என்னவென்று சொல்" எனப் பணிக்க அவள் தொழுது பின்வருமாறுசொன்னாள்:—"யானைதேர் குதிரைவீரர் ஆகியசேனைகளைக் கடலளவுகொண்டவனும், கல்வியுடையவனும், கைம்மாறுவேண்டாமல் மேகம்போல் வழங்குகின்ற பெரியகைகளையுடையவனுமாகிய தயரதசக்ரவர்த்தியின் புதல்வன். புஷ்பபாணங்களால் காமத்தை விளைவிக்கும் மன்மதனைக் காட்டிலும் மேன்மையான வடிவுடையவன். மராமரங்களென்னும்படி வளர்ந்த தோள்களையுடையவன். சர்ப்பசயனனான திருமாலோ என்று எண்ணத்தக்க ஆற்றலை யுடையவன். இராமன் என்பது அவன் பெயர். தம்பியோடும் துதித்தற்குரிய முனியோடும் அவன் இந்நகர் வந்து சேர்ந்தான்.]

என்று நீலமாலை தானறிந்தவரையில் விளம்பி அவன் கார்முகத்திற்கு நாணேற்றி இற்றதையும் ஊக்கமொடு இயம்பினாள். கேட்டனள் இதனைச் சீதை, முன் தான் கன்னிமாடத்தினின்று கண்டகுரிசிலே இக்கார்முகம் வளைத்தவன் ஆயினானோ, மற்று வேறொரு தோன்றலோ என்ற ஐயத்தினின்று தேறுபவளாய்,

கோமுனி யுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணினா னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய நீங்கினாள்
வாமமே கலையினுள் வளர்ந்த தல்குலே.

[இராஜ இருடியுடன் வந்த மேகம்போன்ற மேனியை உடையவன் என்றபிறகு, தாமரைபோன்ற கண்களையுடையவன் என்ற காரணத்தாலும், "ஆம். அவனே" என்று சந்தேகம் நீங்கினாள். அழகிய மேகலைக்குள் அல்குல் பூரித்தது]

என்று தன்னுள் தீர்மானஞ்செய்துகொண்டாள். ஆசை புரிகின்ற வஞ்சனையோ கொஞ்சமன்று. தன்னுடைய காதல் நாடிய செம்மலும் இவ்வில்லினை இறுத்தோனும் ஒருவனே ஆதல்வேண்டும் என்பது அவளது கழிபேர் விழைவு. மற்றிப் பின்னவனை இவள் கண்ணிற் கண்டதில்லை. முன்னாளவன் கண்டவன் தயரதன் புதல்வன் என்பதறியாள். ஆதலின் நீலமாலை சொல்லிய அடையாளங்களைக்கொண்டு இவ்விருவரும் ஒருவரே என்று ஐயமறத் துணிதற்கு இடமில்லையாயினும் "ஆம், அவனே" என ஐயம் நீங்கினாள் என்றுரைக்கின்றனர் கம்பர். முன்னாள் முனிவனொருவருடன் இரண்டு மைந்தர்கள் வந்தனர். அம்மைந்தருள் மூத்தவனைக் காதலித்தாள். மற்று அன்றைக்கே வேறு ஒருமுனிவனுடன் வேறுஇருமைந்தர்கள் நகரத்தில் வந்தனரென்பது சாதாரணமாய் நேர்வதொன்றன்று. ஆதலின் 'கோமுனியுடன் வந்தவன்' என்ற குறிப்பைக்கொண்டு இன்று வில்லையிறுத்தவனும் அவனேயெனத் தேர்தல்நியாயமேயாகும். ஆயினும், தனது ஆசையினளவு சீதை ஐயந் தீர்வதற்கு நீலமாலை இயம்பிய அடையாளங்கள் அமையா. ஆதலால், 'கொண்டல்' என்றும், 'தாமரைக் கண்ணினான்' என்றும் அவள்சொல்லாததை இவளே சேர்த்துக்கொள்கின்றாள். இது மானுடமனதிற்கு இயற்கையாய நுண்ணிய சூழ்ச்சிகளுள் ஒன்று. ஆசை செல்வழி அமைதி நாடி ஐயம் என்பது அறவே தீர்ந்ததுபோல் பாவனை புரிவோமானாலும் நாமாகக் கற்பித்துக்கொண்டு தேறுகின்ற தெளிவு, அவ்வையம் அதிகமென்பதற்கே அறிகுறியாம். இல்லையெனில் சீதை,

சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பன் "

என்று அகத்துள் உன்னுவானேன். நீலமாலை சொல்லிய குறியினால் "அத்தோன்றலே அவன்," என்று தேர்ந்திருப்பாளாயின், பின் 'அல்லனேல் இறப்பன்' என்று அழுங்கவேண்டியதில்லையே. சொல்லாத குறியினால் "அத்தோன்றலே அவன்" என்று தேற்றேகாரத்தோடு துணிய முயன்றாளாதலாற்றான், "அல்லனேல் இறப்பன்" என்றும் உன்னுவாளாயினள். பலநாட்சென்று மன்றல்மண்டபத்தில் தன தண்ணலையவள் கண்ணிற் காணுங்காறும் அவளுக்கு இந்தச் சந்தேகந் தீர்ந்திலது. ஏனெனில், "தோன்றலே அவன்" என்று ஐயம் நீங்கினாள் என இவ்விடத்தில் கூறியபோதிலும், திருமணத் தினத்தினன்று சீதைக்குக் குண்டலமணிந்து கோலஞ் செய்ததை,

வெள்ளத்தின் சடிலத் தான்றன்
வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை
அல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னூச லாடும்
குழைநிழ லுமிழ விட்டார்

[உடல்தளர ஆவிசோரத் தன்பெண்மையை அன்றுகன்னிமாடத்தருகில்தோன்றி அள்ளிக்கொண்டு அகன்ற காளைதான், கங்கையைத் தரித்த சடையுடைய சிவபிரானது வில்லை இறுத்து இன்று என்னை மணங்கொள்ள நிற்கின்றவனோ அல்லனோவென்று ஒருபோதுதேர்ந்தும் மறுபோது அயிர்த்தும் ஊஞ்சலாடும் அவள் உள்ளத்தைப்போலக் குண்டலங்களும் புறத்தே அசைந்து ஒளிதிகழ அணிந்தனர்]

என்றுரைக்குமாற்றால் இத்தேற்றேகாரம், ஆசையாலையத்தை வெல்லமுயன்ற கொள்கைபற்றி வந்ததேயன்றித் துணிவின் பாலதன்று என்பது புலப்படும்.

திருமணம்நிறைவதன்முன் இக்காட்சியையுங் காதலையும் கம்பர் பயக்குவித் திலராயின், இவையனைய நயங்களுக்கு நாம் அயலா யிருக்கவேண்டும். களவியல்துறைகளிற் காட்சியும் பிரிவாற்றாதிரங்கலும் கூறுதற்கே கம்பருக்கு இக்கதை இடந்தந்தது. ஆதலின் அதனை ஏற்று அணிபெற அமைத்தார். பாங்கியிற் கூட்டம் பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, வரைவு கடாதல் முதலிய செய்திகளைச் செப்புதற்குச் செவ்வி நேர்ந்திருக்குமாயின் பின்னு மின்னால் எத்தனை [illegible] கோடு திகழ்ந்திருக்குமோ!

தமிழ்ப் பாடம் 56.

[நளவெண்பா.]

கலிநீங்கு காண்டம்.

கருகிக் குறுகிய உருவத்துடன் நளன், கார்க்கோடகன் உரைத்தபடி அயோத்திமாநகரத்திற்கு வழிக்கொண்டான். போகின்ற வழியில் அவன் ஓர் கடற்கரையைச் சேர நேர்ந்தது. தமிழ்நூல்கள் நிலத்தை நான்கு அல்லது ஐந்து திணைகளாகப்பிரித்து அவ்வவைகளுக்கு ஏற்றபடி சில பொருள்களும் செய்திகளும் அமைத்துக் கூறுவது மரபென்று முன் (முதல் வால்யூம் 71-வது பக்கம்) கூறியிருக்கின்றோம். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற இந்தப் பாகுபாட்டையும், அந்தந்த நிலங்களுக்கமைந்த கருப்பொருள் உரிப்பொருள் முதலியவற்றின் தன்மையையும் சென்றஆண்டு ஸ்ரீமான். E. N. தணிகாசலம் முதலியார் இக்கலாநிலயத்தில் "தேவாரமும் ஐந்திணையும்" என்னுந் தலைப்பின்கீழ் 32வது இதழ் முதல் 39வது இதழ்வரையில் எழுதிய எட்டுக் கட்டுரைகளால் எளிதில் அறிந்து கொள்ளலாம். நெய்தல் என்பது கடலும் கடலைச்சார்ந்த இடமும் ஆம். பிரிந்து அகன்ற காதலர் பிரிவாற்றாமல் வருந்துகின்றவிஷயத்தைக் கவிகள் நெய்தல்நிலத்தில் வைத்துச் சொல்வது மரபு. அதற்கேற்றபடி, கடற்கரையைச் சேர்ந்த நளன் தமயந்தியை நினைத்து இரங்குவதைப் புகழேந்திப்புலவர் ஆறு செய்யுள்களில் சுருக்கமாகவும் மிக்க நயமாகவும் கூறுகின்றார்:—

நினைப் பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே [மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான்-பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. 17.

பதப்பிரிவு:—நினைப்பு என்னும் காற்று அசைப்ப நெஞ்சு இடையே மூளும் கனல் புகைய வேகின்றான் கண்டான் பனி குருகு தண் படா நீழல் தனி பேடை பார்த்து இரவு கண்படா வேலை கரை.

அன்வயம்:—நினைப்பு என்னும் காற்று அசைப்ப நெஞ்சு இடையே மூளும் கனல்புகையவேகின்றான்—தண்படா நீழல் பனிக்குருகு தனிப்பேடை பார்த்து இரவு கண்படா வேலைக்கரை—கண்டான்.

பதவுரை

நினைப்பு - (தமயந்தியை விட்டுப் பிரிந்து போகின்றான் என்னும்) நினைவு
என்னும் - ஆகிய
காற்று - காற்றானது
அசைப்ப - அடிப்பதால்
நெஞ்சு இடையே - தன் மனதில்
மூளும் - மண்டுகின்ற
கனல் - துக்கமாகிய நெருப்பு
புகைய - புகைவிட்டு எரிவதனால்
வேகின்றான் - மெய் புழுங்குகின்றவனாகிய நளன்,
தண் - குளிர்ச்சி
படா - குறையாத
நீழல் - நிழலில்
பனி - குளிரால் நடுக்கமுடைய
குருகு - ஆண்கொக்கு
தனி - (தன்னுடைய) ஒப்பற்ற
பேடை - பெண்கொக்கை
பார்த்து - பார்த்தவண்ணமாய்
இரவு - இரவு முழுவதும்
கண்படா - தூங்காதிருக்கின்ற இடமாகிய
வேலை - சமுத்திரத்தின்
கரை - கரையை
கண்டான் - பார்த்தான்.

விளக்கம்:— நளன் கடற்கரையைக் கண்டான், என்பது இச்செய்யுள் சொல்கின்ற விஷயம். எந்த நிலைமையிலிருந்த நளன், என்ன தன்மையதான கடற்கரையைக் கண்டனன் என்றதைக் குறிக்கும் அடைமொழிகளாய் மற்ற வார்த்தைகள் வந்திருக்கின்றன. தமயந்தியை விட்டுப் பிரிந்ததை நினைக்கநினைக்கத் துக்கம் என்னும் தீ மென்மேலும் பற்றி எரிந்து வேகின்ற நளன்—என்பது முதலிரண்டு அடிகளின் கருத்து. ஆண் கொக்கானது தன்பக்கத்திலே அமர்ந்திருக்கும் பெண்கொக்கின் மீதிருக்கும் ஆசையால் தூங்குவதுமின்றி அதைப்பார்த்துக்கொண்டே இரவு முழுவதும் கழித்திருக்கும் காதற்செய்தி நிகழும் இடமாம், அக்கடற்கரை. அவ்வாறு கொக்குக் கண் விழிப்பதை நளன் பார்த்தான் என்று இச்செய்யுள் கூறவில்லை. நளன் பார்த்த கடற்கரையின் இயற்கை அது என்றுதான் கூறுகின்றது. கொக்கின் இத்தகைய காதலை நினைக்கும்போது நளன் பிரிந்தகொடுமை பின்னும் அதிகப்படும்.

குறிப்பு:—வேகின்றான், என்பது வினையாலணையும் பெயர். அசைப்ப என்ற காரணப்பொருளில் வந்த வினையெச்சம், புகைய என்னும் மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டுமுடிகின்றது. புகைய, என்பதும் காரணப்பொருளில் வந்த வினையெச்சம். அது வேகின்றான், என்னும் வினையாலணையும்பெயரைக் கொண்டு முடிகின்றது.

படா, என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். ஈறு கெடாதிருந்தால் படாத என்றிருக்கும்.

நீழல், இரவு, என்னும் இரண்டு சொற்களும் ஏழாம் வேற்றுமைத் தொகைகள். விரிந்தால், நீழலில் இரவில் என்று ஆகும்.

கொம்ப ரிளங்குருகே கூறு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று. 18.

பதப்பிரிவு:—கொம்பர் இளம் குருகே கூறுது இருத்தி ஆல் அம்புயத்தின் போதை ஆறு காலால் தும்பி திறக்க தேன் ஊறும் திரு நாடன் பொன்னை உறக்கத்தே நீத்தேனுக்கு ஒன்று (ஆல், அசை).

பதவுரை.

கொம்பர் - கிளையில் இருக்கின்ற
இளம் - இளமை பொருந்திய
குருகே - கொக்கே,
அம்புயத்தின் - தாமரையின்
போதை - மலரை

தும்பி - வண்டுகள்
அறு - ஆறு
காலால் - கால்களால்
திறக்க - கிண்டித் திறப்பதால்
தேன் - தேனானது
ஊறும் - சுரந்து பெருகும்
திரு - அழகிய
நாடன் - நாட்டையுடைய வீமராஜன்
பொன்னை - மகளை
உறக்கத்தே - நித்திரையில்
நீத்தேனுக்கு - விட்டுப் பிரிந்த எனக்கு
ஒன்று - ஒருவார்த்தைகூட
கூறுது - உரைக்காமல்
இருத்தி - இருக்கின்றாய்.
(இது நியாயமா) என்று நளன் சொன்னான்.

விரிவுரை:—வருத்தமுற்றுத் தவிப்பவர் தம்முடைய துயரை யாவரேனும் வினவி ஆறுதல் சொல்லாரோவென்று ஏங்குவது இயற்கை. மரக்கிளை யிலுட்கார்ந்திருந்த வொருகொக்கை நோக்கினான் நளன். நோக்கி அதன் எதிரேபோய் நின்றான். அதுவோ யாதும் பேசவில்லை. தன்னிலையைக்கண்டு பரிந்து ஒருசொல் சொல்லாமலிருந்த அந்தக் கொக்கின் நெஞ்சு மிகவுங் கொடியதென வெறுத்து, "ஏ, கொக்கே, விதர்ப்பராஜன் அருமைமகளைத் தூங்கும்போது விட்டுவந்திருக்கின்ற எனக்கு நீ பரிவுமொழி யொன்றுங் கூறுமல் இருக்கின்றாய். இது தருமமா, நீயே எண்ணிப்பார்" என்று கலங்கிய மனதினால், பக்ஷிகள் பேசாவென்பதையும் மறந்து இவ்வாறு குறைகூறினான்.

குறிப்பு:—கொம்பர் இளம், என்பது கொம்பரில் இருக்கின்ற இளமையான, எனவிரியும். இல் என்னும் உருபும், இருக்கின்ற என்னும் பயனுந் தொக்கிருப்பதால் இது ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

குருகே, என்பது கூப்பிடுகின்ற பொருளில் வருவதால், எட்டாம் வேற்றுமை.

நீத்தேனுக்கு, தன்மை வினையாலணையும்பெயர். நான்காம் வேற்றுமை.

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்—இன்ன [ருள்கண்
டஞ்சினா னாவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினா லெல்லா நினைந்து. 19.

பதப்பிரிவு:—புன்னை நறும் தாது கோதி பொறி வண்டு கன்னி பெடை உண்ண காத்து இருக்கும் இன் அருள் கண்டு அஞ்சினான் ஆவி அழிந்தான் அற உயிர்த்து நெஞ்சினால் எல்லாம் நினைந்து.

அன்வயம்:—பொறிவண்டு புன்னைநறும் தாது கோதிக் கன்னிப்பெடை உண்ணக் காத்திருக்கும் இன் அருள்கண்டு, நெஞ்சினால் எல்லாம் நினைந்து, அஞ்சினான். அற உயிர்த்து ஆவி அழிந்தான்.

பதவுரை.

பொறி - புள்ளிகளையுடைய
வண்டு - ஆண் வண்டானது,
புன்னை - புன்னைமலரின்
நறும் - வாசனையமைந்த
தாது - மகரந்தத்தை
கோதி - கிண்டி (தான் உண்ணமல் தன்னுடைய)
கன்னி - இளமையான
பெடை - பெண்வண்டு
உண்ண - உண்ணும்பொருட்டு
காத்து - காத்து
இருக்கும்- இருந்த (அதன்)
இன் - இனிய
அருள் - அன்பை
கண்டு - பார்த்து,
நெஞ்சினால் - தன்மனதில்
எல்லாம் - (முன்நிகழ்ந்த) எல்லாம்
நினைந்து - எண்ணி
அஞ்சினான் - கூசினான். (கூசி)
அற - மிகுதியும்
உயிர்த்து - பெருமூச்சுவிட்டு
ஆவி - உயிர்
அழிந்தான் - சோர்ந்தான்.

விரிவுரை:—கொக்கோதனக்கொன்றுங் கூறவில்லை என்று சலிப்புற்ற நளன் அங்கிருந்த வண்டுகளைப் பார்த்தான். பேசாத பழியொன்றே பறவையைச் சேர்ந்ததென்றால் இவ்வண்டோ தன்னுடைய செய்கையால் நளனுடைய மனம் அழுங்கும்படி புரிந்தது. மகரந்தத்தைக் கோதியஆண்வண்டு தான் உண்ணமல் தன் பெட்டைவண்டு உண்ணும்படி காத்திருக்கின்றது காண, 'ஐயோ, இவ்வண்டினத்திற்கு இருக்கின்ற அன்புகூட இல்லாமல் நான் மனைவியை நடுக்காட்டில் நிசிப்போதில் தூங்குகையில் துறந்து வந்தேனே. அதுவும் எத்தகைய மனைவியை! இந்திரன் முதலாய தேவரையெல்லாம் வேண்டாமல் என்னை வேண்டி மாலையிட்டாளைத். தந்தைநகர்செல்லமறுத்து என்னோடு காட்டிற்கே வந்தாளை!" என்று இன்னதெல்லாம் நினைத்து நளன் வருந்தினான். இவ்விதம் ஒன்றைக்கண்டு மற்றொன்றை நினைப்பதாகக் கூறுவதை நினைப்பு அணி என்பர்.

ஆண்வண்டு, பெண்வண்டு உண்ணக் காத்திருந்ததென்னுங்கருத்துத் தோலாமொழித்தேவர் பாடிய 'சூளாமணி' என்னும் நூலில் வந்திருக்கின்றது. அங்குச் சுரமை என்னும் நாட்டின் முல்லைநிலத்தை வருணிக்கும்போது அப்புலவர் பாடியவொரு செய்யுள் பின்வருமாறு:—

நக்க முல்லையு நாகிளங் கொன்றையும்
உக்க தாதடர் கொண்டொலி வண்டறு
எக்க ரீர்மணற் கிண்டி யிளம்பெடைப்
பக்க நோக்கும் பறவையொர் பாலெலாம்.

இச்செய்யுளின் பொருள், "ஒரு பக்கமெல்லாம், சிரித்தனபோல் மலர்ந்த முல்லைமலர்களும் மிகவும் இளமையான கொன்றையும் சொரிந்த மகரந்தம் அடர்ந்து, அதனை உண்பதற்கு அடைந்த வண்டுகளின் ஒலி நீங்காத குளிர்ந்த மேடடைந்த மணலை, ஆண் வண்டு குடைந்து, தன் இளம் பெண்வண்டு முதலில் உண்ணுமாறு அழைக்க அது இருந்த பக்கத்தைப் பார்க்கும்," என்பது.

இலக்கணம்.

மொழிக்கு முதல்காரணமா யிருக்கக்கூடிய ஒலி எழுத்து. தமிழ் எழுத்துக்களைப் பற்பல தன்மை நோக்கிப் பற்பல வகைகளாய்ப் பிரிப்பார்கள். அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள். க் ங் ச் ஞ் ட்

ண் த் ங் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்ற மேலே புள்ளியிட்ட பதினெட்டு எழுத்துக்களும் மெய் யெழுத்துக்கள். உயிரெழுத்துக்களில், அ இ உ எ ஒ என்ற ஐந்து எழுத்துக்களும் குறில்கள். இவைகளை விடச் சிறிது நீண்டு உச்சரிக்க வேண்டுமாகையால், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ, என்னும் எழெழுத்துக்களும் நெடில்கள். மெய்யெழுத்துக்கள் எல்லாம் ஒரே அள வாகத்தான் உச்சரிக்கப்படும். ஆகையால் மெய்யெழுத் துக்களுள் குறில் நெடில் என்கின்ற பேதம் இல்லை. ஆனல், உச்சரிக்கின்ற அழுத்தத்தில் வித்தியாசம் மெய்யெழுத்துக்களுக்குள்ளே இருக்கின்றது. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு எழுத்துக்களையும் உச் சரிக்கும்போது அழுத்திச்சொல்லவேண்டியிருக்கின் றது; ஆகையால் அவைகளுக்கு வல்லினம் அல்லது வல்லெழுத்துக்கள் என்றுபெயர். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற எழுத்துக்களை மெதுவாக உச்சரிக்கவேண் டும். ஆகையால் அந்த ஆறு எழுத்துகளுக்கும் மெல் லினம் அல்லது மெல்லெழுத்துக்கள் என்று பெயர். மற்ற, ய் ர் ல் வ் ழ் ள், என்ற ஆறு எழுத்துக்களும் வல்லினம்போல் அவ்வளவு அழுத்தாமலும் மெல்லி னத்தைப்போல் அவ்வளவு மெதுவாக இல்லாமலும் நடுத்தரமாக உச்சரிக்கப்படும். ஆகையால் இவை களுக்கு இடையினம் அல்லது இடையெழுத்துக்கள் எனப் பெயர்.

உயிரெழுத்துக்களுள் உச்சரிக்கின்ற நேரம் அல் லது அளவில் வித்தியாச மிருக்கின்றது; அழுத்து வதில் வித்தியாசமில்லை. மெய் யெழுத்துக்களை உச் சரிக்கும் நேரம் எல்லாவற்றிற்கும் ஒன்றுதான். ஆனல் எப்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும் என்ற விதத்தில் மெய்யெழுத்துக்கள் வித்தியாசப்படும்

ஃ, என்பது உயிருமன்று, மெய்யுமன்று, அதற்கு ஆய்தவெழுத்து என்று பெயர்.

இனி, க கா கி கீ, ச சா etc. என்றபடி ஒவ் வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெ ழுத்துக்களுங் கூடி ஒலிக்கின்ற எழுத்துக்களுக்கு உயிர்மெய்யெழுத்துக்கள் என்று பெயர். $18 \times 12 = 216$ உயிர்மெய் எழுத்துக்கள் இருக்கின்ன. க்+அ =க, என்று ஆகிறதே ஒழிய, அ+க்=க, என்று ஆகவில்லை. அதாவது மெய்யின் மேல்தான் உயிர் வந்து சேர்கின்றது. க என்று சொல்லும்போது அதில் க் என்னும் மெய்யெழுத்தின் ஒலியும் அ என் னும் உயிரெழுத்தின் ஒலியும் சேர்ந்திருப்பதை உச் சரித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்க் கும்போது மெய்யெழுத்தின் சப்தமே முதலில் தொனிப்பதையும் அறிவீர்கள். ஆனலும் இவைகளை உயிர்மெய், என்று முதலிலே உயிரைத்தான் சொல் லிப் பெயர் வைத்திருக்கிறார்களே யொழிய மெய்யுயி ரெழுத்து என்று அவைகளை அழைப்பதில்லை.

உயிர்மெய் யெழுத்துக்களில் உயிர் மெய் ஆகிய இரண்டும் இருப்பதால், உயிர்மெய்க் குறில்கள் ஐந் தும் உயிர்மெய் நெடில் எழும் ஒவ்வொரு வரிசை யிலுமாகப் பதினெட்டு வரிசையிலும் உண்டு. மெய் யெழுத்துக்களின் பிரிவின்படி ஆறு வரிசை வல்லின உயிர்மெய்யாகவும், ஆறுவரிசை மெல்லினஉயிர்மெய் யாகவும், ஆறுவரிசை இடையின உயிர்மெய்யாகவும் இருக்கும்.

இனி எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய காலஅளவிற்கு மாத்திரை என்று பெயர். ஒரு மாத் திரை என்பது, ஒருதரம் கைநொடிப்பது அல்லது கண்இமைப்பது செய்வதற்கு வேண்டிய நேரம். இப் படிப் பார்த்தால், க் ங் போன்ற மெய்யெழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய மாத்திரை அரைமாத்திரை, அதாவது ஒருதரம் கண்கொட்டுவதற்குள் அல்லது கையை நொடிப்பதற்குள் இரண்டு மெய்யெழுத்துக் களைச் சொல்லிவிடலாம். எந்த இனமாயிருந்தா லும் மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும் அரைமாத் திரைதான். குறிலுக்கு மாத்திரை ஒன்று! நெடிலிற்கு இரண்டு. உயிரெழுத்திற்கும் உயிர்மெய்எழுத்திற் கும் உச்சரிக்கும் அளவில் வித்தியாசமில்லை. அ, என் பது உயிர்க்குறில்; அதற்கு மாத்திரை, ஒன்று. ப என்பது உயிர்மெய்க் குறில்; அதற்கும் மாத்திரை ஒன்றேதான். ப்+அ என்று சேர்ந்து ஆயிருப்ப தால் ஒன்றரை மாத்திரை உண்டோ என்று எண் ணப்படாது. நெடிலும் அவ்வாறே உயிராயிருந்தா லும் உயிர்மெய்யாயிருந்தாலும் இரண்டேமாத்திரை பெறும்.

அப்பர்.

2. அப்பர் யௌவனமும் பலசமய ஆராய்ச்சியும்.

1. அப்பர் யௌவன பருவத்தைப் பற்றிய பெரியபுராண வரலாறு

48. பக்கத் தொடர்ச்சி.

மருணீக்கியார் தன் தாய்தந்தையரும், தமக்கைக்கு நியமித்திருந்த புருடனும் சிவலோகம் சென்றபின்னர்த் *தேகநிலையாமையை நன்குணர்ந்தவராய் முத்திபெறுதற்குச் சாதனங்களான பல்வகை அறங்களைச் செய்து கீர்த்திபெற்றனர். அவையாவன, தருமசத்தி ரங்களும் தண்ணீர்ப்பந்தரும் நியமித்தல், குளங்கள் வெட்டுதல், வழிப்போக்கர் இளைப்பாறும் சோலை களமைத்தல், முதலியனவாம். இத்தகைய அறங்கள் † யாவருக்கும் தடையின்றிச் செய்வாராயினர். விருந் தோம்பலும், பாவலர்க்குப் பரிசளித்தலும் இவர் குலத்திலே பிறந்த குணமாம். அக்குணமிவரிடம் சிறந்து விளங்கியது. இங்ஙன மியற்றுநாளில் மருணீக் கியார் பலசமயங்களை †ஆராய்ச்சி செய்யலானர். அப் போது கொல்லாமை யென்னும் விரதமாகிய போர் வையையுடைய பொய்ச் சமயமாகிய சமணமதத்தில் (சிவனருள் பெருமையாலே *) சிக்கலாயினர். அக் காலத்தில் கூடலூருக்குவடக்கே பாடலிபுரமென்னும் ஒருசமணப்பள்ளியமைந்திருந்தது. அவ்விடம்சென்று அச்சமணர்களை அவர் முத்திநெறி வினவ அவர்கள் தமது நூல்களைப் போதிக்கலாயினர். மருணீக்கியார் சமணநூல்கள் யாவும்கற்றுத் தருமசேனரென்னும் பேர்பெற்றுச் சமணத் தலைவராய்ப் பௌத்தர்களை வாதில்வென்று புகழ்பெற்றனர்.

இவ்வாறு மருணீக்கியார் காலம் கழிக்கு நாளில் முத்திநெறியைக் கடைப்பிடித்தொழுகும் அவர் தமக் கையான திலகவதியார் கெடிலநதிக்கு வடகரையி லுள்ள திருவதிகை வீரட்டானம் என்னும் தலத்தில் சிவபெருமானுக்கு விளக்கல், மெழுகல், மலர்கொய்து மாலைதொடுத்தல் முதலிய திருப்பணிகள் செய்துவந் தனர்.

அவ்வம்மையார் நாடோறும் தன்தம்பியைப் பர சமயக் குழியினின் றெடுத்தருள வேண்டுமெனச் சிவ பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானர் திலகவதியார்கனவிற்றோன்றி "உன் உடன்பிறந்தான் முன்னமே என்னையடையத் தவமுயன்றான். அவனுக் குச் சூலைநோய் தந்து ஆள்வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அப்போதே சமணப்பள்ளியில் வைகும் தருமசேனருக்குச் சூலைநோய் ஆரம்பித்தது.

தருமசேனர் குடரைத்தொடர்ந்து முடுக்கியிடும் சூலை நோயின் கொடுமைக் காற்றுதவராய்க் கீழே விழுந்து பதைத்து மூர்ச்சையடைந்தார். சமணர்கள் குண்டிகைநீரைத்தெளித்தும், மந்திரித்தும் மயிற்பீலி யால் தடவியும் பற்பல உபசாரங்கள்செய்தும் அந் நோய் நீங்கவில்லை. தருமசேனருக்கு வந்தபிணி நீங்கா தெனத்தெரிந்து குண்டர்கள் கைவிட்டனர்.

தருமசேனர் வேறுவகை யறியாமல் திலகவதியா ருக்குத் தன் சமையலாள் மூலமாய்த் தன் நோயின் தன்மையைத்தெரிவித்துத் தான் உய்யும்வகை கண்ட றிந்துவரச் சொன்னர். அவன்போய்த் திலகவதியா ருக்கு இச்செய்திதெரிவிக்க அம்மையார்"நான்சமண ப்பள்ளி நணுகிலேன், என்று உரை" என்றார். அம்மறு மொழியை ஏவலாளன் தருமசேனருக்குத் திரும்பி வந்துதெரிவித்தவுடன் அன்றிரவு அவர் சமண்பள்ளி விட்டு வெண்புடவை தரித்துத் திருவதிகை வீரட்டா னம் சென்று திலகவதியார் திருமடத்தில் அவரைச் சரணடைந்தார். திலகவதியார் தன் தம்பியரை எழுந் திருக்கச்செய்து பஞ்சாக்ஷரமோதித் திருநீறளித் தார். மருணீக்கியார் நீறுசாற்றிய மேனியராய்த் திரு வதிகை வீரட்டானத்தில் அதிகாலையில் சென்று தம் பிரான் திருவருளால்* தமிழ்மாலைகள்சாற்று முணர்வு பெற்றுக் "கூற்றாயினவாறு" என்னும் திருப்பதிகம் பாடினர் †. அப்பதிகம் பாடியவுடன் சூலைநோய் நீங்கி யது. அங்ஙனம் பரமன் திருவருள் பெற்று ஆநந்தபர வசராய் "அடியேன்செய்த பிழையான செய்கைக்குத் தாழ்ந்தவிடத்தில் நின்றும் ஒருக்காலும் ஏறக்கூடாத வொரு பெரிய மேட்டில் ஏறம்படித் தேவரீர் கருணை வைத்தது பொருந்துமோ" என்றும் "பொய்மைமெய் யாக விருத்திசெய்த அற்பச் சமணமதக் குழியில் விழுந்து ‡அதனின்றுஎழுந்திருப்பதற்குச் சக்தியற்ற வனய்ப் பாவம்செய்கின்ற அடியேனை உய்வித்த இச் சூலைநோய்க்கு என்னை கைம்மாறு உண்டு" என்றும் ஆடிப்பாடலானர். அத்தருணத்தில் பரமசிவன் கட் டளையால் ஒரு அசரீரி "இனியசொற்களே மணம்பர

---

* மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினல்
ஆசிலறச் சாலைகளும் தண்ணீர்ப்பந் தருமமைத்தார் (35)

காவனர்த்தும் குளத்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார் (36)
—பெரிய புராணம்.

† இப்பாசுரத்தை நோக்குக:—

இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தா ரையனை யாறனாரே
—திருவையாறு-திருநேரிசை.

†. பாறினய்ப் பாவி நெஞ்சே பன்றிபோ லளற்றிற் பட்டு
தேறிநீ நினைதி யாயிற் சிவகதி திண்ண மாகு
மூறலே யுவர்ப்பு நாறி யுதிரமே யொழுகும் பாசங்
கூறையான் மூடக் கண்டு கோலமாக் கருதி னாயே"
—தனித் திருநேரிசை

விளக்கினர் பெற்ற வின்ப மெழுக்கினற் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொடுத் 'ால் தூயவிண்ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில் கீதங்சொன்னர்க் கடிகடாம் அருளுமாறே
—தனித்திருநேரிசை

* "அவனருளாலே அவன் றாள்வணங்கி"—திருவாசகம்

* முன்னை நான்செய்த பாவ முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றதும்
அன்ன மார்வயல் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப்பி தற்றியே
தருக்கோழம்பம்—திருக்குறுந்தொகை 7.

† நீற்றால்நிறைவா கியமே னியுடன்
நிறையன் புறுசிந் தையினேசமிக
மாற்றார்புரமாற் றிய வேதியரை
மருளும்பிணி மாயை யறுத்திடுவான்
கூற்றாயின வாறு விலக் ககிலீர்
எனநீ டியகோ தில்திருப் பதிகம்
போற்றா லுலகே ழின்வரும் துயரம்
போமா றெதிர் நின்றுபுகன் றனரால் 70.
மன்னும் பதிகம் மதுபா டியபின்
வயிறுற் றடுசூ லைமறப் பிணிதான்
அந்நின் றநிலைக் கணகன் றிடலும்
அடியே னுயிரோ டருள்தந் ததெனச்
செந்நின் றபரம் பொருளா னவர்தம்
திருவா ருள்பெற் றசிறப் புடையோர்
முன்னின் றதெருட் சிமருட் சியினுன்
முதல்வன் கருணைக் கடல்மூழ் கினரே. 72.
அங்கங் களடங் கவுரோ மமெலாம்
அடையப் புளகங் கண்மூகிழ்த் தலரப்
பொங்கும் புனல்கண் கள்பொழிந் திழியப்
புவிமீ துவிழுந் துபுரண் டயர்வார்
இங்கென் செயலுற் றபிழைப் பதனல்
ஏறா தபெருந் திடரே றிடநின்
தங்கும் கருணைப் பெருவெள் ளமிடத்
தகுமோ வெனவின் னனதா மொழிவார் 72.
—பெரியபுராணம்

‡ பொய்வாய் மைபெருக் கியபுன் சமயப்
பொறியில் சமணீ சர்புறத் துறையாம்
அவ்வாழ் குழியின் கண்விழுந் தெழுமா
றறியா துமயங் கியவம் புரிவேன்
மைவா சாறுங் குழன்மா மலையாள்
மணவா ளன்மலர்க் கழல்வந் தடையும்
இவ்வாழ் வுபெறத் தருசூ லையினுக்
கெதிர் செய்குறையென் கொலெனத் தருவார் 78.
—பெரியபுராணம்

விய நன்மலர்களாகத் * தொடுத்த வளம்பொருந்த பதிகமாப் பாமாலை நீர் சாத்தியபடியால், நாவுக்கரசு என்று உமது நாமம் ஏழுலகத்திலும் பிரசித்தியடையக் கடவது'' என்றமொழிந்தது. அதுகேட்டுத் திருநாவுக்கரசர் "இங்ஙெடுங்காலம் மனதிற் குடிகொண்ட தீவினையை உடைய அடியேன் அடைந்த பாக்கியம் இப்படிபட்டதா''வென்றுகளித்துக் கடவுளின் பெருமையறியாத இராவணனுக்கும் † அநுக்கிரகம் செய்யும்படி ஒப்பற்ற திறமுள்ள மெய்மையாகிய தன்மையை அறிந்து துதிக்கின்றதேமேலதாமென்று வணங்கினார். அவ்வூர் அடியார்கள் மேளவாத்தியங்களுடன் அவரைப் புடைசூழ்ந்தனர். இவ்வாறு வாகீசர் சைவராய்த் திருவதிகை வீரட்டானத்தில் உழைவாரப் படையுடன் திருப்பணி செய்பவராய்ச் சிவசின்னங்கள் விளங்கிடச் சிவபெருமான் ஆட்கொண்ட விஷயத்தைப் புகழ்ந்து பாடிவந்தனர். ‡

இது நிற்க; தருமசேனருக்கு வந்தசூலைநோய் ¶தீராமல் அவர் சைவராய்ப் பிணியொழிந்த சங்கதி சமணரறிந்து, "அந்தோ! பலசமயங்களும்வென்ற தருமசேனரால் நிலைபெற்ற இந்நெறி இன்றழிந்ததே'' என்று ஏங்குவாராயினர். இதற்குச் சூழ்ச்சி நடத்துவான் சமணமுனிவர் யாவரும் குழுமித் தம்முடைய விருத்தி கெடாவண்ணம் வஞ்சனையொன்றுசித்திரிக்கலானார். அதாவது, தருமசேனர் பொய்ச்சூலை சற்றித்து அது தீரவில்லையென்று தன் தமக்கையிடம் போய்ச்சேர்ந்து சமணமதத்தைக் கைவிட்டதுமல்லாமல் தெய்வத்தையும் நிந்திக்கிறாரென்று சமணமுனிவர், பல்லவனென்னும் அந்நாட்டு அரசனிடம் முறையிட்டனர். பல்லவன் வெகுண்டு தன் மந்திரிகளை விளித்து "இம்முனிவர் பகன்ற தீயோனை விடாதென் பாற் கொண்டுவருக. அதற்குவேண்டிய அளவு பொருளும் எடுத்துச் செல்லுக'' வென்று கட்டளையிட்டான். மந்திரிகள் பொருளுடனும் பரிவாரங்களுடனும் திருவதிகை வீரட்டானமடைந்தனர்.

திருவதிகையை அடைந்த மந்திரிமார் தமது அரசன் தருமசேனரை அழைத்துவரச் சொன்னதாய் அவருக்குத் தெரிவித்தனர். திருநாவுக்கரசு "நான் எந்த அரசனுக்கும் * குடியல்லேன், நீர் யார், உமது மன்னவன் யார், நான் வாரே''னென்றார். தந்திரத்தில் மிக்க மந்திரிகள், அவர் பாதம் பணிந்து நாயனார் எழுந்தருளித் தங்களை இரக்ஷிக்க வேண்டுமென்று வருந்திக்கூற, இது சிவபெருமான் திருவுள்ளமே என்று திருநாவுக்கரசர் வந்த வமைச்சருடன் பல்லவன் சமுகம் சேர்ந்தார். ஆருக்கோபமுடைய பல்லவன் சமண முனிவர்கள் தூண்டுகோலால், திருநாவுக்கரசரை நீற்றறையிலிட்டுத் தீயிடுகவென்று கட்டளையிட்டான். நாயனார் கடவுள் சிந்தனையிலாழ்ந்தவராய்த் தியானத்திலிருந்ததால் யாதொரு வெப்பமும் அவரை அணுகவில்லை. ஒருவாரஞ்சென்று, நீற்றறையைத் திறந்து நோக்குவீரென்று அரசன் ஏவலாளரை விட்டனன். அதனின்று அனைவரும் வியக்கத் திருநாவுக்கரசு,

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நிழலே''

என்னும் பதிகம்பாடி வெளிவந்தனர் †. இதனால் அரசன் சமணமதம் விட்டு நீங்குவானெனப் பயந்த அருகர் சமணமதத்தில் நெருப்புகட்டும் வித்தையற்ற தருமசேனரை அக்கினி எரிக்கவில்லை என்றுமொழிந்தார் ‡ இங்ஙனம் மொழிந்து சமணர் அரசனை நோக்கித் திருநாவுக்கரசுக்கு விஷமூட்டிக் கொல்லுமெனத் துர்புத்திபோதிக்கப் பல்லவராயன் அப்படியே செய்வீரெனக் கட்டளையிட்டான். அப்பர் அடியவர்களுக்கு விஷமும் அமுதமாமெனச்சொல்லிச் சமணர்கொடுத்த தீய விஷத்தோடு கலந்த பால்சோற்றை உண்டனர்.

* மேவுற்ற விவ்வேலையில் நீடியசீர்
வீரட்ட மமர்ந்த பிரானருளப்
பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகம்
தொடைபாடிய பான்மையினல்
நாவுக்கர சென்றுலகேழினு நின்னுமங்கள்
நயப்புற கண்ணுகவென்
றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறை வானிடையே
யொருவாய்மை யெழுந்ததுவே. 74.
—பெரியபுராணம்

† இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக்
கிறையாகிய வன்பருயிர் நெடுநாள்
சித்தந்திகழ் தீவினை யேனடையும் திருவோ
விதுவென்று தெருண்டறியா
அத்தன்மைய னுய விராவணனுக் கருளும்
கருணைத் திறமானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே மேல்
கொண்டு வணங்கினர் மெய்யுறவே 75.
—பெரியபுராணம்

‡ திருவதிகை திருவீரட்டானம். ஏழைத்திருத்தாண்டகம் திருவடித் திருத்தாண்டகம் முதலியன காண்க.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதியென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.
—திருவாரூர் - திருத்தாண்டகம். 3.

¶ உற்ற வர்தம் முறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டர்
சுற்றி லல்லதென் கண்டுபில் கொள்ளுமே?
—திருவதிகை வீரட்டம்-திருக்குறுந்தொகை. 3

* திருமறுமாற்றத் திருத்தாண்டகம்.

† இச்சமயத்தில் பாடிய பாசுரமென்பது சிலர் கொள்கை; சேக்கிழார் திருமொழியைக்காண்க:—

வெய்ய நீற்றறையது தான் வீங்கிளவேனிற் பருவர்
தைவருதண் தென்றல் அலைதத்தண் கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளி வெண்ணிலவலர்ந்து முரன்றயாழொலியி
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே [னதாய்
பெரியபுராணம் 98.

‡ அதிசயமன் றிதுமுன்னை யமண்சமய சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தா னெனவேந்தற் குரைசெய்து
மதிசெய்வ தினிக்கொடிய வல்விடமூட் டுவதென்று
முதிரவரும் பாதகத்தோர் முடைவாயான் மொழிந்தார்கள்
ஷை. 102

* அவ்விஷத்தை யுண்டும் திருநாவுக்கரசு யாதொரு வருத்தமு மில்லாமலிருக்கையில் சமணர் பயந்து இத்தேசத்தில் இவர் பிழைத்திருந்தால் தமக்கு அழிவுண்டாகுமென்று எண்ணி, அரசனை நோக்கி, நஞ்சமயத்திலுள்ள விடம்தீர்க்கும் மந்திரத்தால் தருமசேனர் நஞ்சின் வலிவை யடிக்கினர், என்று மொழிந்தனர். மதிகெட்ட அரசன் இனி என் செய்வோம் என்று வினவ, சமணர் தருமசேனரை ஒரு மதயானையின் காலால் மிதித்து உயிரைமாய்க்க வேண்டுமென்றனர். அரசனும் அதற்கிசைந்தான். சமணர், கூற்றினும் கொடியதொரு யானையை நாயனார்மேல் முடுக்கிவிட்டனர். திருநாவுக்கரசு "சுண்ணவெண்சாந்து'' எனும் பாசுரம்பாடி, அம்மதக்களிற்றை நோக்கி "நாம் மூவிலைச்சூல வீரட்டர் அடியோம். நாம் அஞ்சுவதில்லை அஞ்ச வருவதுமில்லை'' என்றனர். மதயானை திருநாவுக்கரசை வலம்வந்துவணங்கிப் பூமியில் தாழ்ந்து யாவரும் அதிசயிக்க அவரைவிட் டகன்றது. மறுபடியும் அதன்மேலிருந்த பாகர்கள் அங்குசத்தால் குத்தித்திருப்பி அவரைக் கொல்லவேண்டுமென்கிற குறிப்பைக் காட்டினர்கள். அது அப்படி நடவாமல், அவர்களைத் துதிக்கையால் எடுத்து வீசிக் கொன்று விட்டுச் சமணர்கள்மேல் ஓடியது. ஓட்டங்கொண்ட சைனர்கள் பலர் அம்மதயானையால் மிதியுண்டு மாண்டனர்.† பல்லவனும் துன்பக்கடலி லாழ்ந்தான்.

யானையின் கையிற் பிழைத்த சமணர்களெல்லாம் மானமழிந்து மதிமயங்கி அரசனடியில்வீழ்ந்து புலம்பினர். வேந்தன் வெகுண்டு இனி யாதுசெய்வதென்றான். சமணர் "வேந்தே! நமது சமயத்திய முஷ்டிநிலையால் எங்களை யானையால் அலக்கழித்த தருமசேனனைக் கல்லுடன் பாசம்பிணித்துக் கடலிற்பாய்ச்சுக'' வென்றனர். பல்லவனும் அதற்கிசைந்து திருநாவுக்கரசைக் கல்லினோடுபூட்டிக் கடலில்விட்டெறிகவென்றான். அத்தீத்தொழில் சமணரும் அஞ்சாது செய்தனர்.*

கடலிலிடப்பட்ட †வாகீசர் பஞ்சாக்ஷரமாகிய நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடலுற்றார். அவர் பக்தியின் தன்மையால், அவரைக்கட்டிய கல் நீர்மேல் மிதக்க ஆரம்பித்தது. அக்கல்லையே தெப்பமாகக்கொண்டு வாகீசர் திருப்பாதிரிப்புலியூர் சமீபத்தில் வந்தடைந்தார். அவரைக்கண்டு சைவக்கூட்டம் கடல்போல் முழங்க அரஅர என்னும் ஓசையுடன் திருப்பாதிரிப் புலியூரென்னும் திருநகரை யடைந்து,பின்னர்த் திருவதிகைக்கு மீண்டார். வழியில் ‡ திரு மாணிக்குழி திருத்தினைநகர் இப்பதிகளுக்குச்சென்று திருப்பதிகம் பாடியதாயும் சேக்கிழார் கூறுகிறார். ஆயினும் திருநாவுக்கரசுநாயனார் பாடல்கள் அத்திருப்பதிகளில் பாடியன நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு திருவதிகைக்குத் திருநாவுக்கரசுநாயனார் மீண்டபின்னர், இவர் மகிமை யாவரும் யுணர்ந்தவராக, சைவ சமயாசாரிகளின் முதல்வராய் எண்ணப்பட்டு உலகப்பிரசித்தி யடைந்தனர். இவ்வளவே நாம் இவர் யௌவன பருவத்திய வரலாற்றைப் பெரிய புராணத்தாற் கண்டறிகின்றோம்.

189039

* இவ்வற்புதம் நடந்ததைத் தேவாரத்திலும் அப்பர் ஒரு போக்காய்ச்செப்பினர்.

(i) துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திடாதே
அஞ்செழுத் தோதில் நாளும் அரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா வமணர் தந்த
நஞ்சமு தாக்கி வைத்தார் நனிபள்ளி யடிகளாரே
திருநனிபள்ளி - திருநேரிசை. 5.

(ii) சினந்திருத்தும் சிறு பெரியார் குண்டர் தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடி
புனர்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் தனைப் பொருளா வாண்டு கொண்டு
தனந்திருத்தும் அவர்திறத்தை யொழியப் பாற்றி
தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்து மழபாடி வயிரத் தூணே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே
—திருமழபாடி - திருத்தாண்டகம்.

†. 1. வேழம் பத்தவைர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாகும் பத்தர்கள் சாலச் சதுரரே
திருக்கோழம்பம்-திருக்குறுந்தொகை. 1.

2. அருந்துணையை யடியார்தம் மல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வரும்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ளோடும்
பொருந்தணைமேல் வருப்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
கோயிற் பெரியதிருத்தாண்டகம். 5.

* கூச வாரலர் குண்டர் குணமிலர்
நேச மேதுமி லாதவர் நீசர்கள்
மாசர் பால்மங் கலக்குடி மேவிய
ஈசன் வேறுப டுக்கவுய்ந் தேனன்றே.
—திருமங்கலக்குடி-திருக்குறுந்தொகை. 9.

† கல்லி னோடெனைப் பூட்டிய மண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினல்
நெல்லு நீள்வயல் நீலக்கு டியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே
—திருநீலக்குடி-திருக்குறுந்தொகை 7.

‡ திருமாணிக்குழியில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், திருத்தினை நகரில் சுந்தரர் பதிகம் ஒன்றும் திருமுறைகளில் காண்கின்றோம்.

நமது சந்தா நேயர்கள் தமது சந்தா பணத்தை உடனே மணியார்டர் செய்துவிடும்படி கேட்டுக்கொள்கின்றோம். இரண்டொரு வாரங்களுக்குள் அனுப்பாத பக்ஷத்தில் வி. பி. மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளும்படி எதிர்பார்க்கின்றார்களென்று உணர்ந்து, மூன்றாவது வாரம் வி. பி. யில் அனுப்புவோம்.

மானேஜர்.

வில்லி பாரத விளக்கம்

பாயிரம்

45 பக்கத் தொடர்ச்சி

பெருங்காப்பியக் கதைகள் கதையின் அமைப்பினால் இரண்டு வகையாக எழுதப்படுவதுண்டு. தலைவன் தலைவியர் பலவகையான இடரில் மூழ்கி இறுதியில் நன்னிலை யெய்துவது ஒருவகை. தலைவன், உயர்ந்த நிலையிலிருந்து தன்னடை கோணித் தாழ்மையை அடைவது மற்றொருவகை ஆகும். இலகிய மனதினராகிய இந்தியர், துன்பத்தை விளக்கும் இரண்டாவது வகைக் கதையில் அதிகமாய் ஈடுபடுவதில்லை. ஆகையால் நமது கதைகள் யாவும் மனதிற்கு மகிழ்ச்சியையே விளைப்பனவா யிருக்கின்றன. பாரதக் கதைக்குத் தலைவராய் விளங்கும் பாண்டவரைவரும் அவ்வாறே பற்பல இன்னல்களை அடைந்து தங்கள் கைவன்மையாலும், துணைவலிமையினாலும் இடையூறுகளையெல்லாம் விலக்கி இன்பப்பேற்றை அடைகின்றனர். ஆயினும், இதில் இரண்டாவது வகைக் கதையும் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். கௌரவர்கள் நல்ல நிலைமையிலிருந்தும், தங்கள் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால், தங்கள் நிலைமாறப்பெற்று, கண்டாரிகழத் தங்கள் குலத்தையே நிர்மூலப்படுத்தி, இம்மையில் சொல்லொணாத் துயரமே அடைந்தனர். ஆகவே கதையின் அமைப்பு, வடமொழியில் ஆக்கியோரது திறமையை வெளிப்படுத்துகிறது.

வடமொழியில் உள்ளதொரு கதையைத் தமிழில் இயற்ற முற்பட்ட தன்னுடைய பெருமிதத்தைத் தானே பழித்துத் தன்சிறப்புப் பாயிரத்தில் கம்பர் சில செய்யுட்களை யியற்றியிருக்கிறார். இராமயணத்திற்கு எவ்வாற்றானும் பின்வாங்காத பாரதக்கதையை எழுதப்புக்க வில்லியும், அவ்வாறே கம்பரைப் பின்பற்றித் தன் தற்சிறப்புப்பாயிரத்தில் தானும் சில கவிகளை வரைந்திருக்கிறார். ஆனால் கம்பரின் சுவை ததும்பும் பாடல்களை ஓதியபின், வில்லியின் தற்சிறப்புப்பாயிரம், ஆயிரங்கதிர்பரப்பி அண்டத்தை அளாவும் காலைச்சுடரின் முன்நிற்கும் நிலாவென வொளி மழுங்கி நிற்கிறது. தற்சிறப்புப் பாயிரத்தின் ஆறு செய்யுள்களில், கடவுள் வணக்கமான முதற் செய்யுளையும், வாழ்த்துச் செய்யுளாகிய இரண்டாவது செய்யுளையும், மாதவன் பெருமையை உணர்த்தும் கடைச் செய்யுளையும் ஒழித்து ஏனைய மூன்று செய்யுட்களையும் எடுத்துக்கொள்வோம்.

"தன்ன பாகமெய் களிப்பதோ ரனப்பிறேல் கதைமுன்
சொன்ன பாவலன் றுகளறு சுகன்றிருத் தாதை
யன்ன பாரதந் தன்னையோ ரறிவிலே னுரைப்ப
தென்ன பாவமற் றென்னையின் றென்சொலா துலகே"

[காதுவழியாய் உடம்புபூரிக்கச் சுகன்தந்தை யியற்றியபாரதத்தை அறிவிலேனாகியநானுரைப்பது என்ன அபிப்பிராயம்? என்னை உலகம் என்சொலாது]

என்னபாவம்! என்னை உலகத்தார் என்சொல்லார்? என்று கையறுநிலையாய்க் கைநொடித்து நிற்கும் மாதொருத்தியைப்போன்று செயலற்று நிற்கும் நிலையையுணர்த்துகின்றதே யொழிய இச்செய்யுள், வேறுவகையில் படிப்போர்மனதில் இரக்கத்தையோ கிளர்ச்சியையோ, தனக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் தாரதம்மியத்தை முரண்விளைந் தழியும்வண்ணம் விளங்கவைக்கும் சாதுர்யத்தினால் உவகையையோ விளைக்கவில்லை. வியாதனார் வகுத்த பாரதத்தை வில்லி சொல்வது என்ன அபிப்பிராயம், என்று படிப்பவரைக் கேட்பதில் பயன் என்னை? எழுதப்புகுந்த வில்லிக்கன்றோ அவ்வபிப்பிராயம் தெரிந்திருக்கும். அவ்வபிப்பிராயம் இன்னதெனத் தெரிவிப்பதைவிடுத்து என்ன பாவம், என்னை யுலகம் என்சொலாது? என்று கேள்விகேட்டு விட்டுவிடுவது கவிக்குரிய தன்மையன்று. உலகந்தான் என்ன சொல்லும்? அது பழிக்கும்; இன்றேல் நகைக்கும். அப்படிப் பழிக்கவும் நகைக்கவும், இடந்தர எழுதியது என்ன காரணமெனின் 'இன்னது' என்று தெரிவிக்க வேண்டியது கவியின் கடமை. அக்கடமையை நமது வில்லி செய்து முடிக்கவில்லை. இதற்கு மாறாகக் கம்பர் எழுதுவதைச் சற்றே கவனிப்போம்.

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

'கடலொலி எனச் சிறப்பிக்கப்பெற்ற ஒலியையுடைய சிறந்த பாற்கடலை அடைந்து ஒரு சிறிய புன்மையான பூனை அந்தப் பாற்கடல் முழுமையும் நக்கிவிட எண்ணங்கொண்டு நக்கப் புகுந்ததுபோல, அளவில்லாத ஆசையினால் குற்றமற்ற வெற்றியையுடைய இராமனுடைய பெருங்கதை முழுவதையும் அற்பனாகிய நான் சொல்லப் புகுந்தேன்' எனப் பொருணயந் தோன்றக் கம்பர் எழுதியிருப்பது மகிழ்ச்சியையுண்டுபண்ணுகிறதன்றோ?

வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

'என்னையே நான் இகழ்ந்துகொள்வதுபோல (எனை வைதலைவின்) வால்மீகியின் சொல் நின்றுலவும் தேயத்தில், நானும் உலகத்துள்ளார் என்னை இகழவும், எனக்குக் குற்றம் வந்தடையவும் இக்கதையைச் சொல்வது எக்காரணத்தாலென்றால், என் சொல்லின் நொய்ம்மையால், தெய்வத்தன்மை பொருந்திய வால்மீகியின் மாண்புஅறிஞர்க்குத் தெற்றெனத் தெரிக்கும் என்பதனாற்றான்.' என்று கம்பர் தன் தாழ்மையும் வால்மீகியின் பெருமையும் தோன்றக் கூறியிருக்கின்றார்.

இனி வில்லிபுத்தூரர், தன் கவியைப் பொறுத்தருளுமாறு உலகத்தாருக்குச் சொல்லும் பாடலை யாராய்வோம்.

முன்சொ லாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
றன்சொ லாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொ லாலுரை செய்தலிற் செழுஞ்சுவை யில்லாப்
புன்சொ லாயினும் பொருத்தருள் புரிவரே புலவோர்.

[முதுமொழியாகிய வடமொழியிலுள்ள நூற்களை முழுவதும் கற்றுணர்ந்த வியாதமுனியின் சொல்லாகிய அப்பெருங் காவியத்தைத் தமிழ் மொழியில் சொல்லுதலால், இது பொருட்சுவை யில்லாமல் வழுக்களுடையதா யிருந்தாலும் புலவர் பொறுத்தருள்வார்.]

இதன் கருத்து என்னவெனின் தான் எழுதியது மாண்புடையதா யில்லாவிடினும், வடநூற்கதையின் பெருமையை நோக்கித் தன் புன்சொல்லைப் பொறுத்தருள்வர் புலவர் என்பது. ஆயினும் கவியை ஒருமுறை ஓதியவுடன், சிறந்த காவியமாகிய வடமொழிப் பாரதக் கதையைத் தமிழிற் செய்தலினால் சுவை குன்றுமாதலால் அதைப் புலவர் பொறுக்கவேண்டும் என்னும் பொருள் தோன்றவும் நிற்கிறது. அன்றியும் வடநூற் காப்பியத்தைத் தென்மொழியிற் செய்த செய்கையொன்றுமே மாண்புடைத்தாகலின், அந்நூல் வழுக்க ளுடையதாயிருப்பினும் புலவர் அச்செய்கை காரணமாய்ப் பொறுத்தருள்வர் என்று பொருள் படவும் நிற்கிறது. இச்செய்யுள் கவியின் கருத்தைத்தெளிவாய் விளக்கவில்லை. அன்றியும் செய்யுளில் உயர்ந்தகருத்தும், விஷய புஷ்டியும் செறிந்திருக்கவில்லை. இவ்வண்ணமாகவே, தன் பிழையைப் பொறுக்கவேண்டுமெனக் கம்பர்சொல்லும் இரண்டு கவிகளையும் கவனித்தால், அவை சுவையுடையனவாய்ச் செய்யுட்களை வியந்து படிப்பவரைச் சிரக்கம்பம் செய்யத் தூண்டுகின்றன : அக்கவிகள் வருமாறு

முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?
அறையும் ஆடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சரும் காய்வரோ
இறையு ஞானமி லாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ?

'இயலிசை நாடகமென்னும் முத்தமிழின் வழியிற் செல்லும் மேலான கவிகளுக்கு யான் ஒன்று கூறுவேன் ; என்கவியைக் குறைகூறுவது ஏற்றதன்று. ஏனெனில் என்னைப் பித்தனாகவோ,பேதையனாகவோ அன்றித் திருமாலிடத்தில்அன்புபூண்டபக்தனாகவோ நீங்கள் எண்ணில், எந்தநிலையிலும் என்னைக் குறைகூற உமக்கு மனமெழாது. மேலும், வீட்டின் அறைகளையும், நாடகசாலையையும் பள்ளிப்பிள்ளைகள் தரையிற்கீறினால், அதுவேதொழிலாகவுடையவரும்,அவைகளைச் சமைத்தலில் கைவன்மை பெற்றவருமாகிய தச்சர் அப்பிள்ளைகளின்மேல் கோபங்கொள்வார்களோ? அதுபோல், சிறிதும் அறிவில்லாத நான்,கைப்பழக்கமாகவும் வேடிக்கையாகவும் எழுதிய இவ்வற்ப நூலைக்கண்டு முற்றுமுணர்ந்த பெரியோர் என்னிடம் சீற்றங்கொள்வரோ?' என்றிவ்வாறு கம்பர் இரக்கமுண்டாம்படி, தன் பெருநிதியாகிய கல்விக் களஞ்சியத்தினின்று ஒரு சிறிது எடுத்துவீசித் தன்னறிவின் பெருக்கத்தைக் குறிப்பிடுகிறார். வில்லிபுத்தூரார் இன்னுமொரு செய்யுளால் தன்விநயத்தை வெளிப்படுத்த விரும்புகிறார்.

மண்ணி லாரண நிகரென வியாதனார் வகுத்த
வெண்ணி லாவொடுங் காதையை யானறிந் தியம்பல்
விண்ணி லாதவன் விளங்குமெல் லையை யூமன்
கண்ணி லாதவன் கேட்டலுங் காண்டலுங் கடுக்கும்.

[உலகத்தின்கண் வேதத்திற் கொப்பான, வியாசர் இயற்றிய பாரதப் பெருங்கதையை யான் தெரிந்து அதைமீண்டும் தமிழில் சொல்லுதல், ஆகாயத்திற் சூரியன் விளங்குமெல்லையை ஊமன் கேட்டலையும், கண்ணிலாதவன் காண்டலையும் ஒக்கும்]

இது,முதலாவதாக வில்லிபுத்தூராரின் சொந்தமான கருத்தன்று. கம்பர் நாட்டுப் படலத்தின் முதற்செய்யுளில்

வாங்கரும் பாதநான்கும் வகுததவால் மீகியென்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச்செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனுநறவமாந்தி
மூங்கையான்பேசலுற்றா னென்னயான்மொழியலுற்றேன்.

என்று கூறியிருக்கும் கருத்தைத் தழுவி வில்லிபுத்தூரர் பாடலும் இயற்றப் பெற்றிருப்பது வெளிப்படையாய்த் தெரிகிறது. ஆனால் கம்பர், மூங்கையான் பேசப்புகுந்தால் அவனுக்குச் சொற்கள்பலவிதமாகாமல், பொருளைத்தரும் வார்த்தைகள் வாயினின்றும் பிறக்காமல், ஓர் அரவம் மட்டும் உண்டாதல்போல், என்னுடைய வார்த்தைகளும் வெறும் ஓசை யுடையவாய் விழுமிய பொருள் தராமல் நிற்கும் என்கிற கருத்துத்தோன்ற உவமையை யமைத்திருக்கிறார்.வில்லியின் செய்யுளில், ஆதவன் எல்லையை ஊமனிடம் கேட்டல் போலென்றுவது, ஊமன் பிறரைக் கேள்வி கேட்டல் போலென்றுவது கொண்டால் உவமையின் பொருத்தம் ஒன்றும் தோன்றவில்லை. ஊமன் கேட்க மாட்டானாதலாலும்,பிறர் கேட்பின்பதிலுரைக்கானாதலாலும், 'ஊமன் மனத்திடை உன்னி விம்முவான்' ஆதலாலும், இவர் எழுதியதற்கும் பொருத்தமின்மை நோக்குக. இனிக்கண்ணிலாதவன் காண்டல் இயலாத காரியம். ஆனால் இவரோ வியாச பாரதத்தைக் கண்டே எழுதியிருக்கிறார். பார்வை ஒரு சமயம் அரைப்பார்வையா யிருக்குமேயொழிய, கண்ணிலாதவன் பார்வையைப்போல் இருள்மூடி யிராதாதலால் இந்த உவமையும் பொருத்தமில்லை யென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. இதற்கெதிரில் கம்பரின் செய்யுளொன்றை வைத்துப் பார்ப்போம்.

துறைய டுத்த விருத்தத் தொகைக்கவிக்
குறைய டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ.

[அகத்துறை புறத்துறைகள் பொருந்திய விருத்தக் கவிகளாலாகிய பலகாவியங்கட்கு (நூல்களைக் கேட்டு) உறையாக அமைந்த பெரியோர் செவிகட்கு என் விருத்தக் கவியை இயம்பல், வீணையினிசையாகிய தேனைப்பருகிக் களித்திருக்கும் அசுணப் பறவையினது செவிகளில் பறையறைவது போலாம்.]

அசுணப்புள் யாழின் இன்னிசையைக்கேட்டு மயங்கிக்கிடக்கும் சமயத்தில், அதன் காதில் பறையோசை பட்டால் மூர்ச்சையாகும் என்பது ஒரு நம்பிக்கை. ஆகையால் நல்ல நூல்களைக் கேட்ட பெரியோர் செவிகளுக்குத் தன்நூல் வெறுப்பையும் துன்பத்தையும் விளைக்குமென்பது கருத்து. அசுணப் பறவை விலங்கைப்போன்று குட்டியீனுமாதவால் அதுநன்மா எனப்பட்டது. இவர் கவியின் மாண்பை நாம் விரித்துரைக்கவேண்டியதில்லை. வில்லிபுத்தூரர் தன்னியல்பாய்த் தன் மனோதத்துவத்துக் கேற்பக் கவி பாடியிருந்தால் வெகுநன்றாயிருக்கும்.வீணில் மற்றவரைப் பின்பற்றிப் போய்த் தன் சிறப்பைக் குறைத்துக் கொண்டார்.

குருகுலச் சருக்கத்தை வாசிக்கும்போது நாம் வில்லிபுத்தூராரின் கவியின் திறத்தைக் காண்கிறோம். பழைய நூல்களைப்போல் நாட்டுப்படலம், நகரப் படலம், ஆற்றுப் படலம் என்று ஆரம்பிக்காமல், எதொரு முன்னுரையும் இயம்பாமல், ஆரம்பத்திலேயே கதையினுள் நுழைந்து விட்டார். பாரதக் கதையை இவர் சொல்லும் விதம் கொண்டாடத்தக்கது. பதினெட்டுப் பருவங்கள் அடங்கிய பெரிய கதையை வழக்கம்போல், நாட்டுப் படலம், நகரப்படலமென்று ஆரம்பித்தால், தானெடுத்துக்கொண்ட பணி விரைவில் முடிவுக்குவாராது என்று கூர்ந்தறிந்தவில்லி, அவ்வழக்கத்தை நீக்கிக் கதையைச்சொல்ல ஆரம்பித்து விட்டார். அக்காரி சுருங்கச் சொல்வதே அழகினுட் சிறந்த வழியென்றறிந்து, கதையைச் சங்கிரமாகச் சொல்லப் புகுந்தது மிகவும் பாராட்டத்தக்கது. முப்பது, முப்பத்தைந்து பாடல்களை முடிக்கு முன்னரே கதையினுள் நுழைந்து அதன் இனிமையில் அமிழ்ந்து விடுகிறோம். அக்காலத்துத் தமிழ்க் கவிகளுக்கெல்லாம் கதையைச் சுருக்கிச் சொல்வதில் எள்ளளவும் பிரியமில்லை. கதையை வீண் வருணனைகளைக்கொண்டும், வேற்றுப்பொருள்வைப்பணிகளைக் கொண்டும் இல்பொருளுவமைகளை வலுவில் அமைத்தும் எவ்வளவுக்கெவ்வளவு பெருக்குகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு பெரியரென்பது அவர்கள் கொள்கையாய் இருந்துவந்தது. வில்லி அவ்வழியை ஒழித்துத் தன்னெண்ணம்போல், கதையின் நிகழ்ச்சியை மட்டும் கூறிப்போனது அவருடைய தைரியத்தையும் அறிவின் கூர்மையையும் விளக்குகிறது. அப்படிக் கதை சொல்வதிலேயே அவர் கருத்தான்றி யிருந்ததனால் வருணனைகளை வருவிக்க இடமில்லாமற் போய்விட்டது.

இராமனுக்கிளையோர் இருமூவராவர்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வடமொழி வான்மீகி ராமாயணத்தை முதனூலாகக் கொண்டு பெரும்பாலும் அதைத் தழுவியே தமது இராமாயணத்தை இயற்றினாரேனும், பலவிடங்களில் அதிலில்லாத சிறந்த கருத்துகளைப் புதிதாய்ப் புகுத்தியும், ஏற்றபெற்றி கதாபாகங்களைத் திருத்தியும், சில விஷயங்களை முற்றிலும் மாற்றியும், சிலவற்றை விடுத்தும் உள்ளார் என்பது கம்பராமாயணத்தைப் படித்தவர் யாவர்க்குந் தெரிந்ததே. ஆயினும் இவ்வேறுபாடுகள் மறதியாலாவது, அவசரத்தால் நேர்ந்த அசாக்கிரதையினாலாவது, ஆராய்ச்சிக் குறைவினாலாவது ஏற்பட்ட அனாவசியமான மாறுபாடுகளன்றி, அவர் தமது அதிமேதையானதன்புத்திக்கூர்மையாலும், மனோவிசாலத்தாலும், தெளிவான மனுஷ்யமனோதத்துவ ஞானத்தாலும், நல்ல காவியரசவுணர்ச்சியாலும் தேர்ந்துகொண்ட தீர்மானங்களேயாகும் என்பது இவர்நூலை ஊன்றிப் படித்து நுணுகி ஆராய்ந்தாலன்றி நன்கு விளங்காது. இத்தகைய அரிய விஷயங்களை இவர் மற்றசாமானியக் கவிகளைப்போல ஓடுகின்றவன் காலிலும் இடறும்படியாகப் பருப்பொருளாக வைக்கிறதில்லை; கவனத்தோடு ஊன்றிப் படிப்பவர் கண்ணுக்கே புலப்படும் நுண்பொருளாகவே அமைப்பர். இவற்றுள் இராமன், குக சுக்கிரீவ விபீஷணர்களை எந்தமுறையிற் கொண்டான் என்பதொன்று.

இராமனுடைய உத்தம குணங்கள் பலவற்றுள்ளும் விசேஷமாக விளங்குவது அவனது பரம சௌலப்பியம். சகல ஜனங்களிடத்தும் இளம் பிராயத்திலேயே இராமன் பேரன்புவைத்து அவர்களுடைய சுகதுக்கங்களை விசாரித்து, இன்மொழி பகர்ந்து மனமகிழ்வித்தான் என்பது பாலகாண்டத்தில், திருவவதாரப் படலத்து,

எதிர்வரு மவர்களை எமையுடை ஐயன்
முதிர்தரு கருணையின் முகமல ரொளிரா,
எதுவினை? இடரிலை? இனிதுநும் மனையும் ?
மதிதரு குமரரும் வலியர்கொல்? எனவே

[தம்பியர்களோடு படிப்பதற்கு வசிஷ்டரது ஆச்சிரமத்துக்குப்போய்ச் சாயங்காலம் திரும்பும்போது வீதியில் தம்மைக் காணவிரும்பி எதிர்வருகின்றவர்களை, எம்மையாளும் இறைவனான இராமன், முதிர்ந்த கருணையோடு முகமாகிய தாமரை மிகவும் மலர்ந்து பிரகாசிக்க அவர்களை நோக்கி, "உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் ஏதேனும் உளதா? யாதொரு துன்பமுந் துயரமுமின்றி நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா? உங்களுடைய யோகக்ஷேமங்கள் முட்டின்று இனிதாக நடந்து வருகின்றனவா? உங்களுடைய இளங்குமாரர்கள் புத்திசாலிகளாய்த் தேகஆரோக்யத்தோடு ஸௌக்கியமாக இருக்கின்றார்களா? என்று கேட்பான்]

என்னுஞ் செய்யுளால் நன்கு விசதமாகின்றது. இவ்வளவு உத்தம சுபாவமுடைய இராமன் வயதும் அறிவும் முதிர்ந்தகாலத்தில், தன்னிடத்தன்புகொண்டு தன்னையடைந்தவர் யாவராயிருப்பினும் அவர்களிடத்துத் தானும் பேரன்பைச் செலுத்தி அவர்களோடு அபேதமாய்க் கலந்து அவர்களைத் தன்சகோதரர்களாகவே பாவித்தொழுகுவது இயல்பே.

இதைக் காட்டவே கம்பர், இராமன் தனது சிற்றன்னை ஏவலால் முடிதுறந்து சடைதரித்து நகர் நீங்கி வனம்போந்தபோது கங்கைக்கரையில் தன்னைக் காணவந்த குகனாகிய வேடனையும், இரிசியமூக பருவதத்தில் தான் தேடிச்சென்றுற்ற சுக்கிரீவனாகிய வானரனையும், தென்கடற்கரையில் தமையனால் துரத்தப்பட்டுத் தன்னைச் சரண்புகுந்த விபீஷணனாகிய அரக்கனையும் தான் தன்னுடன்பிறந்த இன்னுயிர்த் தம்பியராகக் கொண்டான் என்று கூறியிருக்கின்றார். இக்கருத்து இவ்வளவு தெளிவாகவுந் திடமாகவும் முதனூலில் காணப்படவில்லை. குகனைப் பரம பக்தனாகவும், சுக்கிரீவனைச் சிறந்த நண்பனாகவும், விபீஷணனைச் சரணாகத சிரேஷ்டனாகவும் வான்மீகம் கூறுகின்றதேயன்றி அவர்களை இராமனுக்குச் சகோதர முறையில் வைத்துப் பேசவில்லை. கம்பரோ இம்மூவர்களையும் இராமனுக்கு உடன்பிறந்த தம்பியராகவைத்ததுமன்றி அவனது ஜனகபிராதாக்களான பரதலக்ஷ்மண சத்ருக்கனர்களுக்குப் பின்னவரான தம்பியர்களாக இவர்களை வையாமல் முன்னவரான தமையன்மாராகவும் வைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

அயோத்தியாகாண்டத்தில் இராமன், தேனுமீனும் அமுதினுக்கு அமைவதாகக்கொண்டு தன்னைக் காண

வந்து கண்டு தன்னைவிட்டு நொடிவரையும் பிரியமாட்டாத பேரன்பினனாகிய குகனைநோக்கி,

என்னுயிரனையாய் நீ; இளவலுன்னிளையான்; இந்
நன்னுதலவள் நின்கேள்; நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது; நான் உன் தொழிலுரிமையினுள்
[ளேன். (கங்கைப் 68)

[எனக்கு நீ என்னுடைய உயிரைப்போன்ற சகோதரன்; என்தம்பியாகிய இலக்குமணன் உன்தம்பி; இந்தச் சீதை உன்கொழுந்தி; கடலாற் சூழப்பட்ட இந்த உலகமெல்லாம் உன்னுடையது; நான் நீ பணிக்குந்தொழிலைச் செய்வதற்குரியவன்.]
என்றும்,

முன்புளெ மொருநால்வேம், முடிவுள தெனஉன்னா
அன்புள இனி நாமோர் ஐவர்களுளரானோம்
(கங்கைப். 69)

என்றும்; கிட்கிந்தா காண்டத்தில், சுக்கிரீவனைப் பார்த்து,

மற்றினி உரைப்பதென்னே? வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச்செற்றார் ; தீயரே யெனினும் உன்னோ
டுற்றவர் எனக்கு முற்றார்; உன்கிளை எனதென் காதற்
சுற்றமுன் சுற்றம்; நீயென் இன்னுயிர்த்துணைவன்.
(நட்புக்-27)

[இனி வேறு நான் உனக்குச்சொல்லக்கடவதென்? விண்ணுலகிலாகட்டும் இம்மண்ணுலகிலாகட்டும் உன்னைப் பகைத்துத் துன்புறுத்தியவர் என்னைப் பகைத்தவரே; தீயவரேயானாலும் உனது நண்பர் எனது நண்பரே; உன்னுறவினர் எனதுறவினரே; எனது பிரிய பந்துக்கள் உனது சுற்றத்தாரே; எனது உயிர்போன்ற சகோதரனும் நீயே.]

என்றும்; யுத்தகாண்டத்தில் தன்னை அடைக்கலம் புகுந்த விபீஷணனை அருளினோக்கி,

குகனொடும் ஐவரானேம் முன்பு;பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம்; எம்முழை அன்பின்வந்த
அகனமர் காதல் ஐய; நின்னொடும் எழுவ ரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வராற் பொலிந்தான்உந்தை

என்றும், அவனுக்கு முடிசூட்டும்படி இலக்குமணனைப் பணித்தபோது,

தஞ்சநற் றுணைவனான தவறிலாப் புகழான்தன்னை,
துஞ்சலில் நயனத்தைய, சூட்டுதி மகுடம்.
(ஷை-144)

[தஞ்சமென நம்மைப் புகல்புகுந்த நல்ல சகோதரனான குற்றமற்ற புகழையுடையவனான இவனுக்கு (விபீஷணனுக்கு) தூங்காத கண்களையுடைய இலக்குமணா, மகுடஞ் சூட்டிவை.]

என்றும் கூறியவாற்றால் இராமன் இவர்களைத் தன்னுடைய பிராதாக்களாகக் கொண்டான் என்பதுவிளங்குகின்றது. 'துணைவன்' என்னுஞ் சொல்லுக்குச் 'சகோதரன்' என்றும் 'சகாயன்' என்றும் இருபொருள் உண்டு. மேற் கவிகளில் 'சகோதரன்' என்ற பொருளிலேயே அப்பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றதென்பது முன்னும் பின்னுமுள்ள வாக்கியங்களால் தெளியக் கிடக்கின்றது. அன்றியும் 'சகாயன்' என்ற பொருளில், பெரும் படையைத்திரட்டி நாற்றிசையும் ஒருங்கே நாடவிட்டுச் சீதை இருக்குமிடத்தைத் துருவித் தேடியறிவதற்குச் சுக்கிரீவனது சகாயம் இன்றியமையாமையின் அவனுக்குமட்டும் 'உயிர்த்துணைவன்' என்றது பொருந்துமேயன்றி, யதேச்சையாய்க் கங்கைக்கரையில் தன்னைக் காணவந்த குகனுக்காவது, தென்கடற்கரையில் தமையனையஞ்சித் தன்னைச்சரண் புகுந்த விபீஷணனுக்காவது அத்துணைப் பொருந்தாமையும் அறிக.

இனி, இராமன் இப்புதுத் தம்பியர்கள் மூவரையும் தனது தம்பியர் வரிசையில் எவ்வாறு வைத்தானென்று கம்பர்கூறுஞ் சித்திரத்தைப் பார்ப்போம். நியாயமாக வரிசைக் கிரமத்தில் ஏற்கனவே தான் பெற்றுள்ள தம்பியர்கள் மூவராகிய பரதன், இலக்குமணன், சத்ருக்கனன், இவர்களுக்குப் பின்னவராக முறையே குகனையும், அவனுக்குப்பின் சுக்கிரீவனையும், அவனுக்குப்பின் விபீஷணனையும் இராமன் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு கொண்டிருந்தாலும் அதுவே இராமனுடையபெருங்கருணையையும், ஔதாரகுணத்தையும், சமதிருஷ்டியையும் விளக்கிக் காட்டுவதற்குப் போதுமானது. ஆனால் இராமன் ஈடுமெடுப்புமில்லாத புருஷோத்தமமோவுத்தமன் எனக் காட்டுவதற்காகத்தான் பின்பெற்ற தம்பியர்களை முன்னுள்ள தம்பியர்க்குத் தமையன்மார்களாகக் கொள்ளும்படி இராமனைக் கம்பர் செய்திருக்கிறார். இவ்வாறு இராமன் முறைபிறழச் செய்த காரியத்தைத் தவறென நினையாது குணமெனக்கொண்டு அதற்கு மனமுவந்து உடன்பட்டு அதற்கிணங்கப் பரதன்முதலியோர் நடந்ததும் அவர்களுடைய உத்தமகுணத்தையும், இராமனிடத்து அவர்க்கிருந்த பக்தி விசுவாசத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது.

இனி, இவ்வாறு கொள்வதற்குரிய ஆதாரங்களை ஆராய்வாம். அயோத்தியா காண்டத்தில் கங்கைப் படலத்தில் இராமன் குகனை நோக்கி,

'என்னுயிரனையாய் நீ, இளவல் உன்னிளவல்.'

என்றும்,

'படருறஉளன் உம்பி கானுறை பகலெல்லாம்.'

என்றும், இலக்குமணனை அவனுடைய தம்பியாகவும்,

"அங்குள கிளைகாவற் கமைதியின் உளன் உம்பி;
இங்குள கிளைகாவற்கு யாருளர்?"

[அயோத்தியிலுள்ள எனது பந்துமித்ர ஜனங்களைப் பாதுகாப்பதற்கு உன்தம்பியாகிய பரதன் அங்குளன். நீ என்னைப் பின்தொடர்ந்து வந்துவிட்டால் இங்குள்ள எனது கிளைஞரைக் காத்தற்கு வேறு யாருளர்?

என்றுபரதனையும் அவனுக்குத் தம்பியாகவும் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றான். பின் குகப்படலத்தில் இவ்வரலாறுகளைச் சுமந்திரன் பரதனுக்குச் சொன்னபோது, இவன் 'உங்கள் குலத்தனி நாதற்குயிர்த் துணைவன்' (25) என்று சொல்லக்கேட்ட துரிசிலாத் திருமனத்தானாகிய பரதன்,

மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய
துணைவனேல்
என்முன்னே. அவற்காண்பேன் யானேசென்
றெனவெழுந்தான். (27)

[மன்னனாகிய என்தமையன் தழுவிக்கொண்ட மனதுக்கினிய சகோதரனென்றால், இவனும்எனக்குத்தமையனே. யானே முன்சென்று அவனைக் காண்பேன், என்று சொல்லிப் புறப்பட்டான்.]

எழுந்துசென்று கங்கையின் கரையைக் குறுகி, இராமன் சென்ற திசையைநோக்கித் தொழுதுநின்ற, ப தனைக்கண்டு அவனுள்ளக்கருத்தை உணர [illegible]

யிலிருந்த குகன் 'தண்டுறைபோர் நாவாயில் ஒரு தனியே தான்வந்தான்.'

வந்தெதிரே தொழுதானை வணங்கினன்; மலவிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவனடி வீழ்ந்தான்.
தந்தையினுங் களிகூரத் தழுவினன் நகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தி
[யான். (32)

[குகன் வந்து, எதிரே இராமன்சென்ற திசையை நோக்கித்தொழுதுநின்ற பரதனைப் பரபரப்புடன் பணிந்தான் (சக்கரவர்த்தியை வேடர்வேந்தன் வணங்கவேண்டியது முறையாதலின்). பிரமதேவனும் வணங்குதற்கொத்த உத்தமனுகிய பரதனும் அவன் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் (தமையனைத் தம்பி வணங்கவேண்டிய முறைப்படி). நற்குணம் வாய்ந்த பேரறிவாளர் தஞ்சிந்தையினுள்ளும் சிரத்தின்மீதும் பக்தியோடு தாங்கும் பெருங் கீர்த்தி வாய்ந்த பெரியோனுகிய குகனும் தன்காலில் விழுந்து பணிந்த பரதனைத் தழுவியெடுத்து, மகனை மார்புறத் தழுவிக் களிக்குந் தந்தையைக் காட்டிலும் அதிகமான சந்தோஷத்தோடு, தன்மார்புடனணைத்து ஆலிங்கனஞ் செய்தான்]

தமையனெனக் கொண்டு குகனைப் பரதன் காலில் விழுந்து வணங்கினன் என்னும் இப்பெற்றியையோராது அரசகுலத்தவனும் சக்கரவர்த்தியுமாகிய பரதன் கேவலமொருவனசானும், 'ஏழை, ஏதிலன், கீழ்மகனும்' ஆகிய வேடர்தலைவனைப் பணிவது பொருந்தாதெனக் கருதி இப்பாட்டுக்குப் பிறவாறு பொருந்தாப்பொருள் கூறி இடர்ப்பட்டாரும் படுகின்றாரும் உளர்.

இனிப் பின்னரும், பரதன் தன்தாயர் மூவரோடு குகனோட்டிய நாவாயிலேறிக் கங்கையைத் தாண்டும்போது, குகனைப்பார்த்து 'இவன்யார்?' என்றுகேட்ட கௌசலாதேவிக்கு, 'இன்றுணைவனிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கும் எனக்கு மூத்தான்' என்றதும் இதனை நனி வற்புறுத்தும்.

இனிக் கிஷ்கிந்தாகாண்டத்தில், கார்காலங் கழிந்தவுடன் சீதையைத் தேடும்பொருட்டுப் பெரும்வானரப் படையைத் திரட்டிக்கொண்டு வருவதாகச் சொன்ன சுக்கிரீவன் அந்தப்படி வாராமல் காமமதுவையுண்டு மதிமயங்கி விஸ்மிதனுய் இருந்துவிட, அதைப்பொறுத இராமன் அவன் குறித்தபடி வாராமையின் காரணத்தை அறிந்துவரும்படி அனுப்பிய இளையபெருமாளின் சீற்றத்தைச் சமனப்படுத்தி அவனைச்சுக்கிரீவனிடம் அழைத்துப் போகலுற்ற மாருதி இலக்குமணனை நோக்கி,

ஆளிமொய்ம்பின் ஐய, நீர் அளித்த செல்வம்
காண்டியால் உன்முன்வந்த கவிக்குலக் கோனோடு
(கிட்கிந்தைப்-67)

(சிங்கம்போன்ற வலியையுடைய ஐயனே, உனக்குத் தமையனுன வானரகுலத் தலைவனையும், நீர் அவனுக்களித்த செல்வத்தையும் பார்க்கச் செல்வாயாக.)

என்றும், பின்னும், "போந்துன் தம்முனைச் சார்தி" (75) என்றுங் கூறியவாற்றுன் சுக்கிரீவனை இலக்குமணனுக்குத் தமையனுக இராமன் வைத்தான் என்பதும், அதை அனுமான் முதலியோரும் அறிந்திருந்தார் என்பதும் விசதமாகின்றன. பரதனுக்கும் அவனை அவ்வாறே தமையனுகக் கூறிய இடங்கள் யாதுமில்லாவிடினும் தகுதிபற்றி அதுவும் ஊகித்துணரக் கிடக்கின்றது.

விபீஷணன் விஷயத்திலும் இதற்கு நேரான பிரமாணங்கள் கிடைக்காவிடினும், "வந்ததுகொண்டுவாராத துணர்த்தல்" என்னும் யுக்திவகையால் இஃதுய்த்துணரத்தக்கதாக இருக்கின்றது. இராமன் தான் பின் தம்பியாகக்கொண்ட குகன் முதலிய மூவரையும் முன் தம்பியராயிருந்த பரதன் முதலிய மூவருக்கும் ஒன்று பின்னவராகவைத்தல் வேண்டும் அல்லதுமுன்னவராக வைத்தல்வேண்டுமேயன்றிச் சிலரைத் தம்முன்மாராகவுஞ் சிலரைத் தம்பிமாராகவும் அவர்க்குள் ஏற்றத் தாழ்வேற்படுத்தி வைப்பதற்கு இயைந்தகாரணம் யாதொன்றுங் காணப் பெறுமையானும், அரக்கர்குலத்திற் பிறந்தோனாயினும்,

அறநிலை வழாமையும், ஆதி மூர்த்திபால்
நிறைவரு நேசமும், நின்ற வாய்மையும்,
மறையவர்க் கன்பும்"

ஆதிய நற்குண நற்செய்கைகள் நன்குவாய்ந்த தூயனுகியவிபீஷணனை, பக்தியாகப்பரிணமித்த பேரன்பொன்றினுலே சிறப்புற்றிருங்கிய குகனுக்காவது, காமம் கள்ளுண்ணலாகிய இருபெருங் குற்றங்கள் பொருந்தியசுக்கிரீவனுக்காவது, தாழ்ந்தவனுகக் கொள்ளல்கூடாமையானும், அவ்விருவரைப் போலவே இவனும் பரதன் முதலியோருக்குத் தமையன் முறையில் வைக்கப்பட்டான் எனக் கொள்ளலே நேர். இவ்வாறு கொண்டு யுத்தகாண்டம் மீட்சிப்படலத்தில் இராமன் வானரவீரரோடும் அரக்கர்கோனொடும் புட்பகவிமான மீது இலங்கையிலிருந்து அயோத்திக்குமீண்டபோது கங்கைக்கரையில் தன்னை எதிர்காணவந்து தன்னைக் கண்டதும் ஆதரம் பெருகப் பணிந்துநின்ற பரதனையுஞ் சத்ருக்கனனையும் இராமன்

" பெருங்கையால் வாங்கி வீங்குந்
தன்னிணைத் தோள்களாரத் தழுவி அத்தம்பிமாருக்
இன்னுயிர்த் துணைவர்தம்மைக் காட்டினன்; இருவர்தாளும்
மன்னுயிர்க் குவகைகூர வந்தவர் வணக்கஞ்செய்தார். (35.)

இராமன் பரதனையுஞ் சத்ருக்கனனையும் மார்போடழுந்தத் தழுவி, அத்தம்பியரிருவருக்கும் தன்னுடன்வந்த மற்றைய தனது இன்னுயிர்த் தம்பியராகிய, சுக்கிரீவனையும் விபீஷணனையும் காட்டினன். காட்டினவுடன், அங்குள்ளோர் யாவரும் மிகவும் மகிழுமாறு, பரதனும் சத்ருக்கனனும் வந்து அவ்விருவர் தாளையும் வணங்கினர்கள்" என்பதே இதன்உண்மைப் பொருள். இங்கே 'இருவர்' பரதசத்ருக்கனரெனவும், 'வந்தவர்' குக சுக்கிரீவ விபீஷணர்கள் எனவுங் கொண்டு, இம்மூவரும் அவ்விருவரையும் வணங்கினர் என்றுரைத்தல் அமையாதோ என்னின், அமையாது. என்னை? குகனை ஏற்கனவே பரதசத்ருக்கனர் அறிந்துளாராதலின், ஈண்டு அவர்க்குக்காட்டித் தன்னின்னுயிர்த் துணைவரென்று அறிவிக்கவேண்டியது சுக்கிரீவனையும் விபீஷணனையுமே. இவ்வாறு தெரிவித்தவுடன் அவர்களைப் பற்றிய பூர்வ விருத்தாந்தங்களையெல்லாம் அனுமானல் முந்தியே அறிந்த பரதனுஞ் சத்ருக்கனனும் அவரை வினயத்தோடு வணங்கினர்கள் என்பதே பொருத்தமுடைத்து. பரதசத்ருக்கனரைச் சுக்கிரீவ விபீஷணருக்குக்காட்டி 'இவர்தாம் என் தம்பியர்' என்று இராமன் கூறியிருந்தால் அப்பொழுதுதான் முன்னிருவரும் பின்னிருவரை வணங்கினரென்பது பொருந்தும். அவ்வாறு கூறுமையின் இஃது உரையன்மை உணர்க.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்பரகசியத்தைப் பேசினல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. முந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது
[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநாட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணுக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.
மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனை வருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றுய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லைத் தனியிருந்து சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது செட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | **313,** எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | **313, Esplanade, MADRAS.**

வர்த்தமானம்.

பிரஸில்ஸில் வெள்ளம் :—பிரஸில்ஸில் புயலும் மழையும், அதனால் வெள்ளமும் ஏற்பட்டதென்றும், அதோடு சமுத்திரமும் பொங்கி நாட்டிற்குள் புகுந்ததென்றும்,வீடுவாசல்களையும் சொத்துக்களையும் இழந்து 10 ஆயிரத்திற்கு மேலானவர்கள் கஷ்டப்படுகின்றனர் என்றும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

பர்ஷியாவில் ஐரோப்பிய உடை:—பர்ஷியாவில்முற்போக்குடைய பலரிடம் ஐரோப்பிய உடைதரிக்க வேண்டுமென்னும் எண்ணம் ஏற்பட்டுள்ளது. தலைக்கு ஆடவர் ஹாட்டைத் தரிக்கவேண்டுமென ஒரு சட்டத்தை அரசாங்கத்தார் செய்துளார் என்று தெரிகிறது. ஆனால் உலமாக்களும், மதப்பற்றுடைய வைதிகர்களும் அவர்கள் இஷ்டப்படி உடைதரிக்கலாமாம்.

***

சர்வமத மஹாநாடு:—ஜனவரி மாதம் 27-ந் தேதியன்று கல்கத்தாவில் சர்வமத மாஹாநாடு கூடும். இம்மஹா நாட்டில் ஸ்ரீ இரவீந்தரநாதர் தலைமை வகிப்பார். இந்தியாவில் இதுவரை இத்தகைய மஹாநாடு கூடியதில்லை. உலகத்தில் சமரசத்தையும், சகோதரத்வத்தையும் உண்டாக்க முயல்வதே இம்மஹாநாட்டின் முக்கியநோக்கம். பற்பல மதங்களைச்சேர்ந்த பெரியார் பலர் பேசுவார்கள் என்று தெரிகின்றது.

***

மந்திரிகள் ராஜிநாமா:—மத்திய மாகாண மந்திரிகள் தங்கள் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டனர். இதற்குக் காரணம், சட்ட சபையினர் கொண்டுவந்த கைத்தொழில் அபிவிர்த்தி மசோதாவும், பின்னர் அவர்கள் கொண்டு வந்த 'நம்பிக்கையில்லை' என்னும் தீர்மானமும் ஆகும். கவர்னர் மந்திரிகளின் மேற்பார்வையிலிருந்த இலாக்காக்களைத் தனது மேற்பார்வையில் எடுத்துக்கொண்டுவிட்டார் என்று தெரிகின்றது.

***

சைமன் பகிஷ்காரம்:—கல்கத்தாவில் சைமன் கமிஷன் பகிஷ்கார ஊர்வலம் நடந்தது. 20 ஆயிரம் பேர் ஊர்வலத்தில் சேர்ந்தனர். நகரைச் சுற்றிவந்த ஜனங்கள் கடைசியில் ஒரு மைதானம் வந்து சேர்ந்தனர். அங்குக் காங்கிரஸ் தலைவர்கள் பேசினர். ஊர்வலத்தில் கலந்தவர்களில் இருவர் ஆட்சேபிக்கத்தக்கதான கொடிகளைப் பிடித்துச் சென்றனர் என்று போலீசாரால் கைது செய்யப்பட்டனர். வேறு எவ்விதமான நிகழ்ச்சியும் ஏற்படவில்லை என்று தெரிகின்றது.

***

யாதவர் மஹாநாடு:—திருநெல்வேலியில் நான்காவது யாதவர் மஹாநாடு ஸ்ரீமான் கிருஷ்ணரெட்டி என்பவரின் தலைமையில் கூடிற்று. அம் மஹாநாட்டில் இராஜவிசுவாசத் தீர்மானமொன்றும், ஸ்ரீலஜபதிராய் அகால மரணத்தைப் பற்றிய தீர்மானமும் செய்யப்பட்டன. பின்னர் 'யாதவர்கள் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்கவேண்டும், யாதவர்களின் பிரதிநிதிகள் சைமன் கமிஷனர்கள் சென்னைவரும் சமயம் அவர்களுக்கு யாதவர்களின் குறைகளைக்கொண்ட விண்ணப்பமொன்றை அளிக்கவேண்டும்' என ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஜில்லாபோர்டு, தாலுக்காபோர்டு போன்ற பொது ஸ்தாபனங்களில் யாதவகுலத்தாருக்குப் போதியபிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென மற்றோர்தீர்மானம்செய்யப்பட்டது.

***

காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம்:—ஸ்ரீமான் சத்தியமூர்த்திஐயர், ஸ்ரீமான்அல்லாடி கிருஷ்ணசாமிஐயர் அட்வகேட் ஜெனரலானதையொட்டி நடந்த விருந்திற்குப் போனுர் என்று சென்ற சனிக்கிழமையன்று மஹாஜனசபை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் கணேசன் என்பவர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். கூட்டத்தலைவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனுவாஸ ஐயங்கார், சத்தியமூர்த்தி ஐயர் விடுத்த அறிக்கையைக்கமிட்டி அங்கத்தினர்களுக்குக்கொடுத்தார். அதில் சத்தியமூர்த்தி ஐயர், அரசாங்க சம்பந்தமில்லாத கூட்டமெனக்கொண்டு தாம் சென்றதாகக்கூறக் கணேசன் தமது தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டார். பின்னர் ஸ்ரீமான் குழந்தை சத்தியமூர்த்தி ஐயரிடம் நம்பிக்கையிருப்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவர, அதை எல்லோரும் ஆதரித்தனர். அத்துடன் கூட்டம் கலைந்தது.

***

ஆப்கன் நிலைமை :— ஆப்கனிஸ்தானத்தின் நிலைமையைப்பற்றிய முழுவிபரமும் சரியே தெரியவில்லை. கலகக்காரர்களின் தலைவனான பாக்காஸாக்கோ என்பான் ஹபிபுல்லா காஸி என்னும் பேரால் ஆமீர் ஆனுன் என்று தெரிகின்றது. புதிய அமீர் தண்ணீர் தூக்குபவன் மகன் என்றும், ஏழையென்றும் தெரிகிறது. காபூல் வாசிகளும், அருகாமையிலுள்ளாரும் புதிய ஆமீரை ஏற்றனர் என்று ஒருசெய்தி கூறுகின்றது. அமனுல்லாக்கான் காந்தஹாரில் இருந்து வருகின்றுர்என்றும்,அவருக்குப்பிறகு பட்டத்திற்குவந்த இனயதுல்லா சென்றவாரம் பெஷாவர் வந்துள்ளார் என்றும் ஒருசெய்தி கூறுகின்றது. காந்தகாரில்இருக்கும் அமீர்விடுத்த அறிக்கைவருமாறு:-"நான் செய்த சீர்திருத்த முயற்சியெல்லாம் ஜனங்களின் நன்மைக்கும், நாட்டின் வளர்ச்சிக்குந்தான். இருபாலர்க்கும் கல்வி வசதிசெய்தது, இஸ்லாம் மதத்தினிடம் ஜனங்களுக்கு உண்மைப் பற்றுதல் ஏற்படவும், பூசல்கள் ஒழியவுந்தான். என்னை இஸ்லாம் மதப் பற்றற்றவன் என்று உங்களைக் கிளப்பிவிட்டவர்கள் சொல்வதில் உண்மைகிடையாது. நான் உண்மையான முஸல்மன். ஜனங்களிடத்தில் உள்ள அபிமானத்தால்தான் நான் இதுவரை எனது ஆகாய விமானங்களைக் கலகக்காரர்கள்மேல் ஏவவில்லை. இனியும் அடங்காது கலகம் செய்வீர்களேயானுல் எனது விமானங்கள் உங்களுடன் போர் தொடுக்குமென்பதை அறியவும். எச்சரிக்கை செய்யாது ஒன்றும் செய்தலாகாதென்றே இதுவரை ஒன்றுஞ் செய்யாதிருந்து வருகிறேன்."

இந்திய முகமதியர் ஆதரவு:— லாகூரில் இந்திய முகமதியர் கூட்டம் ஒன்று சென்றவாரம் கூடிற்று. பிரபல முகமதியர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அக்கூட்டத்தில் அமனுலாக்கானுக்கு விரோதமாய்க் கிளம்பிய எழுச்சியைக் கண்டிப்பதாகவும், அமனுல்லா இருப்பது ஆசியாவிற்குப் பலம் என்றும், பிரிடிஷ் அரசாங்கத்தார் கலகத்தலைவனையும், [illegible] ராஜாங்கத்தையும் அங்கீகரிக்கக் கூடாதென் [illegible] தீர்மானங்கள் செய்யப்பட்டன.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்ட் செய்யாதது
உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 11-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 11-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189039

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)